இதழ்-60

01.06.2023

# தூமி

பல்சுவை மின்னிதழ்




## பெருவெள்ளத்திற்கான பயணம்

ஆசிரியர் பதிவு

# அங்கீகாரங்களை பெற்றுக்கொடுப்போம்

எண்களில் எப்போதுமே எங்களுக்கு நம்பிக்கை இருந்ததில்லை என்று அடிக்கடி சொல்வதுண்டு. ஆனால் சில எண்களை நாம் எம்மோடு இயங்கும் மற்றும் எம்மை இயக்கும் இதயங்களுக்கு நன்றி சொல்வதற்காக எடுத்துக் கொள்வதுண்டு. அந்த வகையில் இந்த அறுபதை அவர்களுக்கு சமர்ப்பிக்கின்றோம்.

ஒரு முழுச் சக்கரத்தின் பூர்த்தியாக அறுபது தமிழில் விசேடம் பெறுகிறது. ஒன்று போல் அறுபத்தொன்றும் ஒரு புதுத் தொடக்கம். ஒன்றில் தொடங்கும் போது ஆசை, ஆர்வம் எல்லாம் நிறைய இருக்கும். அனுபவம் இருக்காது. ஆனால் அறுபத்தொன்று அவ்வாறு அல்ல. அனுபவம் நிறைய இருக்கும். ஆசை, ஆர்வம் ஆளுக்கேற்ப மாறுபடும்.அனுபவம் நிறைந்த தொடக்கமாக அறுபது ஆனது ஒன்றிலும் சற்று முதன்மை பெறுகிறது. இப்போது நாங்கள் அறுபது மின்னிதழ்களை வெளியிட்ட அனுபவமுள்ளவர்கள். இது ஆணவம் அல்ல. சமூகத்தில் எமக்கான அங்கீகாரத்திற்கான அடையாளம்.

இந்த அங்கீகாரம் துமி மின்னிதழுக்கானதாக இருக்க வேண்டுமென்பதையும் தாண்டி எமது எழுத்தாளர்களுக்கானதாக இருக்க வேண்டும். புதிய பேனாக்களாக எழுதத் தொடங்கியவர்கள் பலர் இப்போது அனுபவப்பட்டு இருக்கிறார்கள். அவர்களுக்கான சமூக அந்தஸ்து உரியவாறு கிடைக்கும் போதுதான் அவர்களும் தொடர்வதற்கான ஊக்கம் வரும். அதோடு மேலும் பல புதியவர்கள் எழுத ஆரம்பிப்பார்கள்.

எழுத்தாற்றல் மிக்க இளைய சமுதாயத்தை நோக்கிய எமது இந்த பயணம், அவர்களுக்கான அங்கீகாரத்தை பெற்றுத்தருவதற்கான நேரம் நெருங்குவதை உணர்கிறோம். அதற்கான வேலைத்திட்டங்களோடு எமது அடுத்த வட்டத்திற்தான பயணம் இனிதே தொடர்கிறது.

***தமிழால் இணைந்தோம்...***
***துமியால் தொடர்வோம்..***

www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06

துமி பல்சுவை மின்னிதழ்

**ஆசிரியர்**
ச. சந்தோஷன்

**இணை ஆசிரியர்கள்**
ஐ.வி. மகாசேனன்
இ. வினோஜன்

**திறனாய்வாளர்கள்**
கு. கீர்த்தனன்
வ.டியனி

**வடிவமைப்பாளர்**
வ. குணநீதன்

**செய்தியியலாளர்**
ந. மயூரன்

# இவ்விதழில் துமித்தவை...

04 பயணங்கள் முடிவதில்லை
07 சமூகத்தை ஆற்றுப்படுத்தும் துமி
08 அவளும் உழைப்பாளியே
10 பரியாரியார் Vs அய்யர்
14 வடக்கிலிருந்து இன்னொரு சிறந்த பந்துவீச்சாளர்
15 தமிழ்நாட்டில் இருந்து துமிக்கு அன்பு வாழ்த்து
16 பாட்டுப் பாடவா..?
18 சர்வதேசத்தை கவர்ந்த யாழ் உற்பத்திகள்
21 பொன்னியின் செல்வனும் வரலாறும்
33 இலக்கை எய்த இறையருளை வேண்டுகிறோம்
34 மாணவர் மத்தியில் கொரோனாவின் தாக்கம்
37 சித்திராங்கதா
44 யார் இந்த மதீஸ பத்ரன?



# பயணங்கள் முடிவதில்லை




அடி மீது அடி வைத்து அயராத முயற்சியால் அறுபதையும் எட்டி விட்டோம். அனைவருக்கும் நன்றி.

அறுபதை அடைவது எம் இலக்கல்ல. ஆனால் நம் பாதையில் இது ஒரு முக்கிய மைற்கல் என்பதும் மறுப்பதற்கில்லை. வீதியோரங்களில் மைல் கற்களை கண்டிருக்கிறீர்களா? தூரங்களை சொல்லி ஓரமாய் நிற்கும் கல். உண்மை என்னவென்றால் மைல் கல்லோடு எந்த பயணமும் முடிவதில்லை. மைல்கல்லை இலக்கு வைத்து எந்த பயணமும் தொடங்குவதுமில்லை. ஆனால் இலக்கை நோக்கிய ஒவ்வொரு பயணத்திலும் மைல்கற்கள் அவசியமாகிறது. அக்கற்களே இலக்கை நோக்கி அழைத்துச் செல்கின்றன. பெரும் பயணத்தின் இடையிடையே சிறு சிறு நிம்மதிகளை தருகின்றன. நம்பிக்கைகளை இரட்டிக்கின்றன. இன்னும் முன்னோக்கி வேகமாய் அடிவைக்க பின்னிருந்து தள்ளுகின்றன.

வீதிகளில் வியப்புக்குறியாய் நிற்கும் மைல்கற்கள்தான், நாமா இத்தனை தூரம் பயணித்தோம் என்று எமக்கே வியப்பளிக்கின்றன. இந்த வியப்பில் ஆச்சரியத்தை விட பெற்றுக் கொண்ட அனுபவங்களே அதிகமாகும்.

எந்தப் பயணியும் திரும்பிவந்து மைல்கல்லிற்கு நன்றி சொன்னதில்லை. யாரும் வந்து சொல்கிற நன்றிக்கு மைல்கல் காத்திருப்பதும் இல்லை.

நம் காலத்திற்கும் முந்தி எத்தனை ஆண்டுகளாய் எத்தனை பேரை இந்த மைல்கற்கள் மார்தட்டி முன்னோக்கி அனுப்பி வைத்திருக்கும்?

நின்று இந்த மைல்கற்களை நாம் தான் வாசிப்பதாய் எண்ணுகிறோம். ஆனால் உண்மை அதுவல்ல. உச்சிவெயிலடிக்கும் போதும் ஒற்றைக் காலில் தவமிருந்து இந்த

மைல்கற்கள் தான் தம் கண்கள் கொண்டு வீதியை வாசிக்கின்றன.

மைல் கல்லின் கண் என்று எதைச் சொல்கிறேன் என்கிறீர்களா? அதன் மீது மை கொண்டு எழுதிய எண்ணும் எழுத்துமே அதன் கண்ணெனத் தருகிறது. வீதி காகிதமாகிறது. எழுத்துக்களாய் - நடமாடும் மனிதர்கள் எத்தனையோ பேர் வந்து போகிறார்கள்.

இலக்கை நோக்கி வேகமாக ஓடுபவன் மைல்கல்லை ஆவலோடு பார்க்கிறான். அடியெடுத்து வைப்பதையே அல்லல் என்று கருதுபவன் மைல்கல்லை எரிச்சலோடு பார்க்கிறான். எல்லாரையும் இந்த மைல்கல் பற்றற்று வாசிக்கிறது.

ஒரு சிறுவன் என்ன நினைத்தானோ தெரியாது. அக்கம் பக்கம் பார்த்துவிட்டு ஒரு தடியெடுத்து மைல்கல்லை விடாது அடித்தான். ஆசிரியரிடம் வாங்கிய அடியை மைல்கல்லிடம் பழிதீர்த்தானாம் அவன். எந்தப் பழியுணர்வும் இல்லாமல் அந்தச்சிறுவன் முன்னேற வாழ்த்தியது மைல்கல்.

ஒருவன் வர்ண சுவரொட்டியை ஒட்டிவிட்டுப் போகிறான். ஒரு நாய் காலைத்தூக்கி நனைத்துவிட்டுப் போகிறது. நிதானம் தவறாது அது எல்லோரையும் பொறுமையாக வாசித்துக் கொண்டிருக்கிறது.

வீட்டில் திண்ணை கூட இல்லாத ஒரு சிறுமி தன்மீது அமர்ந்து படிப்பதையும், தன்னை மிதித்து ஏறி உயரத்தில் நின்று உலகைப் பார்ப்பதையும் மகிழ்வோடு தாங்குகிறது மைல்கல். தன் உயரம் இன்னும் கூடுவதாய் அது கர்வமும் கொள்கிறது.

வேகமான உலகில் இந்த மைல்கற்கள் இனி அநாவசியம் என்றனர் சிலர். அவசியம் என்றனர் சிலர். எனக்கு அது பற்றி தெரியாது என்று அமைதியாய் நின்றது மைல்கல்.

காட்டு வழியொன்றில் கையடக்கத் தொலைபேசியை நம்பி இளைஞனொருவன் வந்தான். சமிக்ஞை கெட்டு ஓரிடத்தில் அவனை கதியற்று நிறுத்திவிட்டது கைத்தொலைபேசி. இடி இடித்தது. மழை பெய்தது. அது புயலாய் மாறியது. திசை மறந்து போனவனிற்கு ஒரு மின்னல்வெட்டு இந்த மைல் கல்லைக் சுட்டிக் காட்டியது. வந்து விழுந்து வணங்கிவிட்டு அது சொன்ன வழியில் சென்றான்.

ஒருவன் மைல்கல்லை நின்று பார்க்க நேரமில்லாமல் வேகமாகச் சென்று கொண்டிருந்தான். இத்தனை அவசரமாய் அவன் எங்கு செல்கிறான். அவன் அடைய விரும்பும் இலக்குதான் என்ன? அவன் இலக்கு அவனுக்காவது தெரிந்திருக்க வேண்டும் என்று தனக்குள் அனுதாபப்பட்டது மைல்கல்.

எங்கோ கம்பத்தில் ஏறுகிற ஒரு கொடியின் நிறம் மாறும் போது மைல் கற்களிலும் சாயம் பூசுகிறார்கள்.

எத்தனை விதமாய் நிறம் கொண்டாலும் அது தன் மண்ணில் கொண்ட பிடிப்பை விடுவதில்லை. கொஞ்சமாய் தான் நகர்ந்தாலும் தன் பணி பொய்த்துவிடும் என்பதை அது மறப்பதில்லை. அணுவளவும் அசையாமல் இருப்பதில் பெருமை மைல் கல்லிற்கு மட்டுந்தான்.
அது தான் முன்னேற விரும்புவதில்லை. பிறரை முன்னேற்றவே விரும்புகிறது. ஆனால் கொடி பிடிப்போர் அப்படியில்லை. அவர்களுக்கு மண்ணில் பற்றும் இல்லை. மற்றவர் முன்னேற்றத்தில் அக்கறையும் இல்லை. கல்லாகிப் போனவர்களே! அந்த கல்லைப் பார்த்தாவது கற்றுக் கொள்ளுங்கள்.

மக்களைப் போல் அல்ல மைல்கல். நொடிக்கொரு தரமாய் அடிக்கடி மாறி நடிக்கும் மானிடரின் நடத்தையை விட கொண்ட பிடி விடாது நிற்கும் மைல்கல் இன்னும் இன்னும் பெரிய ஆச்சரியமே!

ஒரு பொடியன் வந்தான். மைல்கல்லைக் கண்டதும் ஒரு பெரிய கல்லைத் தேடினான். மைல்கல்லிற்கு நேரே குறிவைத்து தன் காலால் கல்லை எட்டி உதைத்தான். அவன் ஏன் அப்படிச் செய்தான்?

மைல்கல்லின் மீது அவனுக்கு அப்படி என்ன காழ்ப்பு? முன்னேற விரும்பாத ஒருவன் எல்லோரையும் முன்னேற வைக்கும் மைல்கல்லை எண்ணி ஆத்திரம் கொண்டானா? அல்லது முன்னேற துணை நின்றவர்களுக்கு எல்லாம் இந்த உலகம் தந்த மரியாதையை தருவதற்காக கல்லெடுத்து எறிந்தானா?

கண்ணுடையர் என்போர் கற்றோர் என்றால் தன் கண்கொண்டு இந்த வையத்தை அளந்து வைத்துள்ள மைல்கல்லும் கற்றோருள் அடக்கம்தானே. கல்லாதவரே அதனை இன்னும் **'கல்'** என்று சொல்லுகின்றனர்.

சற்றுப் பொறுங்கள்... அந்த அட்டையில் இருக்கும் அறுபதாவது மைல்கல் ஏதோ சொல்கிறது..

**'பயணங்கள் முடிவதில்லை'**

## பீர் மோட்டார் சைக்கிள்

அமெரிக்கா, மினசோட்டா மாகாணத்தை சேர்ந்த கே மைக்கல்சன் என்பவர் பீரால்(Beer) இயங்கும் மோட்டார் சைக்கிளை உருவாக்கி அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளார். மணிக்கு 240 கிமீ வேகத்தில் இயங்கக்கூடிய இந்த பைக்கிற்கு எரிபொருளுக்கு பதிலாக பீர் பயன்படுத்தப்படுகிறது. கூடுதலாக வெப்பமூட்டும் சுருளுடன் (coil) 14-கேலன் கெக் கொண்டு இயக்கப்படுகிறது. இந்த சுருள் பீரை 300 டிகிரி வரை சூடாக்குகிறது. பின்னர் அது பைக்கை முன்னோக்கி நகரச் செய்யும் முனைகளில் அதிக வெப்பமான நீராவியாக மாறி இயக்குகிறது.



# சமூகத்தை ஆற்றுப்படுத்தும் துமி

*கலாநிதி. செஞ்சொற்செல்வர். ஆறு. திருமுருகன்*
தலைவர், சிவபூமி அறக்கட்டளை




ஈழத்தில் துமி என்ற பெயரில் அருமையான ஒரு மாதாந்த சஞ்சிகை ஒன்று இளைய தலைமுறை மூலமாக வெளிவந்து கொண்டிருப்பதை யாவரும் அறிவார்கள். யாழ்ப்பாணம் இந்து கல்லூரி பழைய மாணவர்கள் ஏனைய இளையவர்களையும் இணைத்து தங்களுடைய வேலைப்பழுக்களோடும், கல்விச் செயற்பாடுகளோடும் இந்த கைங்கரீயத்தையும் தொடங்கி இன்று துமி என்ற இந்த இதழ் மக்கள் மத்தியில் பலத்த செல்வாக்கை பெற்றிருக்கிறது.

இதனுடைய அறுபதாவது மலர் வெளிவருவது என்பது மிக்க மகிழ்ச்சியைத் தருகிறது. அவ்வளவு சிறப்பாக வேகமாக என்ன பொருளாதார சூழ்நிலைகள் இருக்கலாம், மற்றது இயற்கை சூழ்நிலைகள் இருக்கலாம், அவற்றைத் தாண்டி காலம் தவறாமல் வெளிவந்து கொண்டிருக்கின்றது.

சிறுவர்களுக்கான செய்திகள் தொடக்கம் வரலாற்றுத் தகவல்கள், இலக்கிய கட்டுரைகள், தொடர் நாவல்கள், விளையாட்டுகள் சார்ந்த கட்டுரை, சமூகத்தில் உள்ள இன்றைய விடயங்கள் தொடர்பான சிறப்பு செய்திகள் இவற்றை உள்ளடக்கிய இந்த அருமையான இதழியியலாக எம் மத்தியில் வெளிவரும் துமி தமிழ் உலகத்துக்கு கிடைத்த ஒரு வரப் பிரசாதம் என்று தான் கூற வேண்டும். நாங்கள் சிறுவர்களாக இருந்த காலத்தில் மல்லிகை, ஜீவநதி , சிரித்திரன் இப்படி பல மலர்கள் மாதாந்தம் வெளிவந்து கொண்டிருந்தன. அந்த வரிசையில் இந்த இளையவர்களின் துமி இதழும் தொடர்ச்சியாக வெளிவருவது மனமகிழ்வைத் தருகிறது.

இணையதளம் ஊடாக இந்த துமி வெளிவருகின்ற போது அது தேசம் கடந்து, கண்டம் கடந்து, பல ஆயிரம் வாசகர்களை உள்ளடக்கியதாக இருக்கின்றது. துமி மலர் 60ஆவது மலரைச் சந்தித்து இருக்கின்றது பாராட்டுக்குரியது. தொடர்ந்து இடைவிடாமல் துமி நம் சமூகத்தை ஆற்றுப்படுத்த வேண்டும் என்று கேட்டு இறைவனை பிரார்த்தித்து துமி குடும்பத்தினர் அனைவருக்கும் எனது நல்லாசிகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்து அமைகிறேன்.

# அவளும் உழைப்பாளியே...

வெறும் நாற்பது வயதுதான் ஆகிறது அவளுக்கு
ஆனாலும் தலை முழுதும்
ஆதிக்கம் செலுத்தின நரைமுடிகள்..
அவளின் வாழ்வைப் போலவே
வினாக்குறியாய் வளைந்துபோன முதுகு..
குழிக்குள் பதுங்கிடும் முயலாய் கருவிழி இரண்டும்..
தென்னைமர இடுக்கில் கூடுகட்டும் காகம்
வாயில் கொண்டு செல்லும் குச்சிகளாய் கை, கால்..
பாதம் இரண்டிலும் பாறை வெடிப்புகளாய்
பலவித கோடுகள்!!!
வழித்தெடுத்தாலும் வரமாட்டேன் என்பதாய்
என்னைப் போர்த்திய ஒற்றை நூலாடையாய்
சொற்பச் சதைக்கூட்டம்..
எதியோப்பியாவும் சோமாலியாவும்
பழுதில்லை என்று - இவளை
பார்ப்போர் கூறினாலும்
பனிக்கட்டியில் பதுக்கிய பருவகால மீனாய்
மரத்துப்போன அவள் கையிரண்டும் சொல்லும்
குளிரிலும் பனியிலும்
அட்டைக்கடியிலும் ஆள்வோரின் வெறுப்பிலும்
கண்காணியின் கடுமையிலும்
கொழுத்தும் பசிக்காய் கொழுந்து பறித்திடும்
உழைப்பாளி அவளென்று....!



பிரசாந்தி ஜெயபாலன்

இதனை இதனால்
இவன் முடிக்கும் என்றாய்ந்து
இறைவன் அதனை
அவன் கண் விட்டனன்...!
ஆறு. திருமுருகனாய்
அவதரித்தனன் உலகம் உய்ய..!

ஈழத்தின் குரவராய்...
இந்த நூற்றாண்டின் நாவலராய்...
மக்கள் சேவையோடு
மகேசன் சேவையும் செய்யும்
மகானை ~ அவதார நாளில்
போற்றி வணங்குகிறது தூமி..!






தன் சக்திக்குத் தகுந்த வேகத்தில் தேவையான மருந்துச் சரக்குகளை எடுத்து பையில் போட்டுக் கொண்டு, கட்டியிருந்த வேட்டியோடு, ஒரு சால்வைத் துண்டை தோளில் போட்டுக் கொண்டு புறப்பட ஆயத்தமானார் பரியாரியார்.

“நானும் வாறன். ஆச்சியைப் பார்க்கோணும் போல இருக்கு...”

கையில் குடையை எடுத்தவாறே பரமு கூறினாள்.

“நான் சைக்கிள்ல தான்டி போகப் போறேன். நீ பிறகு பரதனோட போய் பாரன்.”

“என்னது...? சைக்கிள்லயோ..? உங்களுக்கே உடம்பு ஏலாது. இந்த சித்திரை வெயிலுக்க அவ்வளவு தூரம் சைக்கிள் எல்லாம் ஓட வேண்டாம்.... அய்யா உங்களுக்காகத்தானே ஓட்டோ அனுப்பியிருக்கிறார். அதில போட்டு வருவம். வாங்கோ.”

“ஹா.. ஹா.. வீட்டு வாசல் வரைக்கும் வந்து கத்திப்போட்டு, திமிர்ல ஓட்டோவும் அனுப்பி வைச்சிருக்கார். அதில நான் போவனென்டு நீ நினைச்சியோ? ”

“சரி ஓட்டோ வேணாம். பரதனோடயாவது போங்கோவன். சொன்னா கேளுங்கோ”

“நான் சொல்லுறத நீ கேளு.. ஒருக்கா அங்க அனுப்பினதுக்கே அவன் உடைஞ்சு போய் வந்திருக்கான். அவன திருப்ப அனுப்பேலாது. பாவம் பிள்ளை. தாங்க மாட்டான். எனக்கு ஒன்னும் இல்லை. நான் போவன்.”

“போட்டுவாறன்னுதானே வழமையா சொல்லுவிங்கள்?”

“வாசல் வரைக்கும் வந்தவனை மறிச்சு கதைச்சிட்டு இருக்கிற மட்டும் சரியா பரமு?”

அந்த வார்த்தைக்குப் பிறகு

பரமுவால் எதுவும் கதைக்க முடியவில்லை. சிரித்துக் கொண்டே, இல்லை இல்லை மறைத்துக் கொண்டே வழியனுப்பி வைத்தாள்.

அய்யர் அனுப்பி வைத்த ஓட்டோ வாசலில் நின்றது. ஓட்டோக்காரனை போகுமாறு சைகை காட்டிவிட்டு, அய்யர் தனது ரெலி சைக்கிளை எடுத்து ஸ்ரான்டை தட்டினார். அவர் கால் பலத்திற்கு ஸ்ரான்ட் அசையவில்லை. மறுபடி மறுபடி இரண்டு முறை தட்டினார். அசையவே இல்லை. குனிந்து பக்கத்தில் இருந்த மரக்கட்டையை எடுத்து ஸ்ரான்ட் மீது ஒரு அடி அடித்தார். ஸ்ரான்ட் தட்டுப்பட்டது.

எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்த பரமு எதுவும் கதைக்கவில்லை. முடிவெடுத்து விட்டு செல்பவரிடம் முரண்பட்டு பயன் இல்லையென அமைதியாக நின்றாள். ஆனால் அவள் உள்ளம் பதைபதைத்தது. பரியாரியார் அய்யர் வீட்டை நோக்கி புறப்பட்டார்.

தன் கண்ணிலிருந்து பரியாரியார் மறையும் வரை பரியாரியாரையே பார்த்துக் கொண்டிருந்த பரமுவின் கண்களில் கண்ணீர் தாரை தாரையாக வடிந்து கொண்டிருந்தது. அவர் அப்பாலே சென்றதும், நினைவு வந்தவளாக விரைவாகச் சென்று பரதனை எழுப்பினாள். உறக்கத்திலாவது நிம்மதி தேடிக் கொண்டிருந்தவனுக்கு தாயின் பரபரப்பு மேலும் பயத்தை ஊட்டியது. தனது மற்ற சைக்கிளை எடுத்துக் கொண்டு தாயையும் ஏற்றிக்கொண்டு அய்யர் வீட்டுக்கு பரதனும் புறப்பட்டான்.

தான் அனுப்பிய ஓட்டோ அய்யர் இல்லாமல் வருவது கண்டு, விரக்தியோடு கோபமும் இயலாமையும் சேர்ந்து என்ன செய்வதென்றே அய்யருக்கு தெரியவில்லை. அந்த ஊரில் வேறு வைத்தியசாலைகளும் இல்லை. வைத்தியரும் இல்லை. எமனோடு போராடிக் கொண்டிருக்கும் ஆச்சியை எங்கே கொண்டு செல்வது? யாரிடம் காட்டுவது? எப்படி காப்பாற்றுவது? அய்யர் முன்னால் விரிந்த ஆயிரம் கேள்விகளால் அவர் முகம் சுருங்கிவிட்டது.

”ஆச்சியின் நிலைமையை வடிவா சொன்னியா? ஏன் பரியாரியார் வரேலயாம்..? அவ்வளவு தடிப்பா அந்த மனுசனுக்கு..”

ஓட்டோக்காரனிடம் அடுத்தடுத்த கேள்விகளைக் கேட்டு எரிந்து விழுந்தார் அய்யர்.

”நான் எல்லாம் சொன்னான் ஐயா! எல்லாத்தையும் கேட்டுட்டவர். என்னைப் போகச்சொன்னார். ஏன் வரேல என்டு தெரியேல. எங்கேயோ போறதுக்கு சைக்கிள்ல வெளிக்கிட்ட மாதிரி கிடந்தது?”

” எங்கயோ போறதுக்கோ.. தனக்கு ஏலாது என்டுதானே பெடியன அனுப்பினவர். சைக்கிள்ல ஊர் சுத்த மட்டும் ஏலுமோ? வருத்தக்கார மனுசன் என்டு தானே ஓட்டோவும் அனுப்பி வைச்சனான். இந்த

மனுசன் இவ்வளவு வஞ்சம் வைச்சு பழகும் என்டு நான் கனவிலும் நினைக்கேல. பரமுவாவது சொல்லி அனுப்பியிருக்கலாமல்லோ"

தன் இயலாமையை அய்யர் கொட்டிக் கொண்டிருந்த போது கேற் அடியில் சைக்கிள்ச் சத்தம் கேட்டது. பரியாரியார் சைக்கிளில் வந்து கொண்டிருந்தார். அவரைப் பார்த்ததும் அய்யருக்கு சந்தோசத்தில் அழுகையே வந்துவிடும் போல் இருந்தது. ஆனால் வெளிக்காட்டவில்லை.

சைக்கிளை விட்டு இறங்கிய பரியாரியார் உடம்பு வியர்த்துப் போய் இருந்தது. அவர் இயலாமையை அவர் உடல் அசைவுகள் நன்றாகவே வெளிப்படுத்தின. அதைக் கவனித்த அய்யர் அவரின் மருந்துப்பையை வாங்க கைகளை நீட்டினார். ஆனால் பரியாரியார் அய்யரைப் பொருட்படுத்தாமல் நேராக ஆச்சியின் அறைக்குச் சென்றார். பரியாரியார் வருவதைக் கவனித்த அய்யரின் தங்கை சரோஜா வேகமாக ஆச்சியின் அறையை விட்டு வெளியேறினாள்.

ஆச்சியின் நாடியைப் பிடித்துப் பார்த்தார் பரியாரியார். துடிப்பு குறைந்து கொண்டே வருவது தெரிந்தது. மூடியே கிடந்த கண்களைத் தன் விரல்களால் திறந்து பார்த்தார். அவை ஒரு பக்கமாக சொருகிப் போய் கிடந்தன. அதோடு ஆச்சி சேடமும் இழுத்துக் கொண்டிருந்தார். கொண்டுவந்த பையில் இருந்து சில பச்சிலைகளை எடுத்து கௌசல்யாவிடம் கொடுத்து அரைத்துக் கொண்டு வரும்படி அனுப்பினார். பச்சிலைகளை வாங்கிக்கொண்டு அம்மியடிக்கு கௌசல்யா போனாள். பின்னாலேயே பதறியடித்து வந்த சரோஜா அந்த இலைகளை வாங்கி தானே அம்மியில் அரைக்கலானாள். சரோஜாவில் திடீரென ஏற்பட்ட பதட்டமும், காலையிலிருந்தே ஆச்சியோடு நின்றவள் திடீரென ஓடி ஒளிந்தமையும் கௌசல்யாவுக்கு சந்தேகத்தை வரவைத்தன.

"அம்மா! ஆச்சியோட நிக்காம ஏன் இப்படி பின் பக்கம் வந்து நிக்கிறீங்க?"

சரோஜா ஒன்றுமே பேசவில்லை... திரும்பத்திரும்ப கௌசல்யா கேட்டும் சரோஜாவிடம் பதிலேதும் இல்லை. கௌசல்யாவின் சந்தேகம் அதிகமானது. தொடர்ந்து தாயைக் கேட்டுக் கொண்டே இருந்தாள். அப்போது அந்த இடத்திற்கு வந்த அய்யர்,

"என்ன பிள்ளை கத்திக்கொண்டு நிக்கிறாய்? சரோஜாட்ட வாங்கி நீ அரைக்கலாமல்லோ.. நேரமாகுது. கெதியா கொண்டு வரட்டாம்."

"நீங்கள் வேற மாமா.. நான்தான் அரைக்க கொண்டுவந்தனான். அம்மா, வாங்கி தான் அரைச்சுக்கொண்டு இருக்கிறா. வாயும் திறக்கிறா இல்லை" கொட்டித்தீர்த்தாள் கௌசல்யா

"பச்சிலை அரைக்கேக்க கதைச்சா மருந்து பலிக்காது. தெரியாதா

உனக்கு..? ” என்று சொல்லி விட்டு அம்மியில் அரைத்துக் கிடந்த இலைகளை எடுத்து கிண்ணத்தில் போட்டுக் கொண்டு ஆச்சியின் அறைக்கு விரைந்தார்.

அம்மாவின் மௌனத்திற்கான காரணத்தை அறிந்துகொண்டாலும், தன் கேள்விக்கான பதில்களை அறியாத கௌசல்யா திரும்ப தாயிடம் கேட்க நினைத்தாள். ஆனால் ஏற்கனவே பதில் கிடைக்காத கேள்விகள் பல அவளிடம் அம்மாவுக்காக இருந்தன. அந்தக் கணக்கில் இவற்றையும் வரவில் வைப்பதுதான் இந்த நேரத்தில் சரியான அணுகுமுறை என்று எண்ணி அமைதியாய் ஆச்சி அறைக்கு நடந்தாள் கௌசல்யா.

அய்யர் கொண்டுவந்த அரைத்த பச்சிலைகளின் சாற்றைப் பிழிந்து ஆச்சியின் வாயில் விட்டார் பரியாரியார். இலைச் சக்கைகளை நெற்றியிலும் உள்ளங்கால்களிலும் வைத்து ஒத்தடம் கொடுக்குமாறு கௌசல்யாவிடம் பரியாரியார் கொடுக்கத் திரும்பிய போதுதான் எல்லோரையுமே திடுக்கிட வைக்கும் அந்த சம்பவம் நடந்தது.

பரியாரியார் பச்சிலைச் சக்கைகளை கொடுத்த கையோடு அப்படியே கீழே விழுந்தார். கௌசல்யா பதறிவிட்டாள். அவள் கத்திய சத்தத்தால் வீதியால் போனவர்கள் கூட உள்ளே வந்திருப்பார்கள். ஆச்சிக்கு ஏதோ நடந்து விட்டதென அய்யர் விழுந்தடித்து ஓடினார். ஆனால் அங்கே விழுந்து கிடந்தது பரியாரியார். அய்யர் திகைத்துவிட்டார். என்ன செய்வதென்றே அவருக்கு தெரியவில்லை.

இந்த சத்தங்களால் குழப்பமடைந்த சரோஜா பொறுமையிழந்து ஆச்சியின் அறைக்கு விரைந்து வந்தாள். அங்கே பரியாரியார் வாயால் நுரை கக்க விழுந்து கிடக்கும் காட்சியை கண்டு அதிர்ந்து விட்டாள். அவளுக்கு உலகமே ஒரு கணம் நின்றுவிட்டது. என்ன செய்வதென்றே தெரியவில்லை. கண்களால் கண்ணீர் பெருக்கெடுத்தது. கத்தி அழ வேண்டும் போல் இருந்தது. ஆனால் ஏதோ... ஒன்று அவளை தடுத்தது.

ஆனால் அந்த தடுப்புக்களை எல்லாம் மீறி விரைந்து சென்று பரியாரியார் கையைப் பிடித்து, நாடியைப் பார்த்தாள். எல்லோருக்கும் நாடி பார்க்கும் பரியாரியாருக்கு சரோஜா நாடி பார்க்கிறாள். எந்த துடிப்பும் இல்லை. தான் நாடி பார்ப்பதில் தவறேதும் இருக்குமோ என்ற ஒரு அசட்டு நம்பிக்கை. பரியாரியார் நெஞ்சில் தன் காதை வைத்து இதயத் துடிப்பை கேட்கத் துடிக்கிறாள். என்ன செய்வது? நெஞ்சில் எந்த துடிப்பும் இல்லை.

கண்ணீர் தாரை தாரையாக சரோஜா கண்களிலிருந்து வந்து கொண்டே இருந்தது. பரியாரியார் தலையை தன் மடியில் வைத்து விக்கி விக்கி அழத் தொடங்கினாள். ஏதோ புலம்ப முனைந்தாள். ஆனால் பேச்சு வரவில்லை. தன் தாய் பரியாரியாருக்காக இப்படி அழுவதைப் பார்த்த கௌசல்யாவுக்கு ஒன்றுமே

புரியவில்லை. சமீபகாலமாக தன் தாயின் நடவடிக்கைகள் யாவுமே கௌசல்யாவுக்கு புதிராகத்தான் இருந்தது.

அய்யருக்கும் என்ன செய்வதென்று தெரியவில்லை. உடம்பு இயலாத மனுசனை அழைத்து பிழை விட்டுவிட்டோமோ என்று கவலைப்பட்டார். யாருக்கும் எதாவதென்றால் பரியாரியாரை அழைப்பதுதான் அந்த ஊரின் வழமை. இன்று அந்த பரியாரியாரே மூச்சுப் பேச்சின்றி படுத்திருக்கிறார். யாரை வைத்து மருத்துவம் பார்ப்பது? குழம்பி நின்றார் அய்யர். அப்போது தான் பரியாரியார் மகன் பரதன் ஞாபகம் அய்யருக்கு வந்தது. அவனை அழைத்து வருவோமென அய்யர் திரும்பினால் அவனும் அவனது தாய் பரமுவும் அங்கே வந்து ஆச்சியின் அறை வாசலில் விறைத்துப் போய் சிலையாய் நிற்கிறார்கள்.

பரியாரியார் அய்யரின் தங்கை சரோஜா மடியில் பேச்சு மூச்சின்றி கிடக்கிறார். அதை பரியாரியார் மகனும் மனைவியும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஒரு கணம் பரியாரியார் தவிர அங்கே நின்ற அனைவர் முகத்திலும் ஒரு புதுவித பதற்றம் தொற்றிக் கொள்கிறது. பல ஆண்டுகளாக வலிந்து புதைக்கப்பட்ட இரகசியம் ஒன்று வெளிவருவதற்கு எத்தணிக்கிறது.

*முடிச்சுக்கள் அவிழும்...*

## வடக்கிலிருந்து இன்னொரு சிறந்த பந்துவீச்சாளர்

இலங்கையின் வடக்கில் இருந்து கிரிக்கெட் உலகிற்கு இன்னொரு சிறந்த பந்துவீச்சாளர் உதயமாகிறார். முல்லைத்தீவைச் சேர்ந்த கமலராசா இயலரசன் Jaffna Kings - BBK அணி சார்பில் இன்று CDB அணிக்கு எதிராக 9 ஓவர்கள் பந்துவீசி 32 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுகளை கைப்பற்றினார். இவரது விக்கெட்டுக்களில் லசித் குரூஸ்புல்லே, ஓஷத பெர்னாண்டோ, ஷெவொன் டனியல், லஹிரு மதுசங்க, முதித்த லக்ஷான் ஆகியோரும் அடங்குவர்.

அவரது பயிற்றுவிப்பாளர் சமிந்த வாஸின் முகத்தில் தெரியும் பெருமிதம் எங்கள் உள்ளங்களிலும் தெரிகிறது. விரைவில் சர்வதேச அரங்கில் கால்பதித்து மண்ணிற்கும் மக்களுக்கும் பெருமை சேர்க்க துமியின் அன்பு வாழ்த்துக்கள்.





# தமிழ்நாட்டில் இருந்து துமிக்கு அன்பு வாழ்த்து

இலக்கியசுடர். த. இராமலிங்கம்
மூத்த வழக்கறிஞர்
தமிழ் நாடு

நமது அன்பிற்கினிய இளைஞர்கள் ஒருங்கிணைந்து, “துமி” என்னும் பெயரில் மின்னிதழ் நடத்தி வருவது, நாம் அனைவரும் அறிந்ததே.

வசதிக்குறைவுகளும், வாழ்க்கை ஓட்டமும் மிகப் பெரிய சவாலாகத்தான் இருக்கின்றன. எனினும், சாதிக்க வேண்டும் என்னும் முனைப்பு காரணமாகவும், கொள்கை உறுதி காரணமாகவும், நமது இளைஞர்கள் தொடர்ந்து இயங்கிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களது செயல்கள் மிகவும் பெருமைக்கும் பாராட்டுக்கும் உரியன.

துமி இதழில் இடம்பெறும் செய்திகள் அனைத்தும் மொழி மற்றும் இனம் சார்ந்த கருத்துகளாகவும், மண்ணின் பெருமைகளைப் பேசுவனவாகவும் இருப்பதுடன், அறிவியல், சட்டம், வரலாறு, கதைகள், கவிதைகள் போன்ற பல்துறை சார்ந்ததாகவும் இருப்பது மிகவும் சிறப்பு.

மிக அழகிய படங்களைத் தேர்வு செய்து இதழுக்குப் பயன்படுத்துவது, இதழின் பெருமைக்கு மகுடம் சூட்டுவதாக அமைகிறது.

இப்போது அறுபதாவது இதழ் வெளிவருவதாக அறிகிறேன். பெருமை கொள்கிறேன். இளைஞர்களின் அனைத்து முயற்சிகளும் தொடர்ந்து வெற்றிபெற அன்பான வாழ்த்துகள்!

# தானியங்கி பேருந்து




உலகிலேயே முதல்முறையாக பிரிட்டனின் முதல் தானியங்கி பேருந்து சேவை ஸ்காட்லாந்தில் தொடங்கப்பட்டுள்ளது. ஸ்காட்லாந்தின் போக்குவரத்து அமைச்சர் கெவின் ஸ்டீவர்ட் இந்த பேருந்தில் முதல் பயணியாக பயணம் செய்தார்.2025ம் ஆண்டு வரை சோதனை அடிப்படையில் ஓட்டுனர் இல்லாத ஐந்து தானியங்கி பேருந்துகள் இயக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பேருந்திலும் வாகனத்தைக் கட்டுப்படுத்தக்கூடிய ஒரு பாதுகாப்பு ஓட்டுநர் மற்றும் டிக்கெட் விற்பனையாளர் என இரண்டு பணியாளர்கள் இருப்பார்கள் என்றும் கூறப்பட்டுள்ளது.

படம் : பொன்னியின் செல்வன் - 2
பாடகர்கள் : ஷங்கர் மஹாதேவன், கே. எஸ். சித்ரா , ஹரிணி
இசை அமைப்பாளர் : ஏ. ஆர். ரகுமான்
பாடல் ஆசிரியர் : இளங்கோ கிருஷ்ணன்

# பாட்டுப் பாடவா...?

காணீரோ நீர் காண்
சோழ வெற்றி வாள் ஒன்றை காணீரே
ஓர் அழகிய பூவே
செல்லுதியோ
மலரிடு போ சகி

வீரா ராஜா வீரா
சூரா தீர சூர
வீழா சோழ வீர
சீரார் ஞாலம் வாழ
வாராய் வாகை சூட...

தொடுவோர் பகைப்போரை
நடுகல் சேரும் வீர
மாறா காதல் மாறா
போவோர் ஏங்கும் தீர
பாவோர் போற்றும் வீர

உடைவாள் அரை தாங்க
பருதோள் புவி தாங்க
வளவா எமை ஆள
வருவாய் கலம் ஏற
ஆயிரம் வேழம் போல
போர்க்களம் சேரும் சோழ



வேந்தா ராஜ ராஜ
வாராய் வாகை சூட

வீரா ராஜா வீர
சூரா தீர சூர

விறலியர் கானம் பாட
கணிகையர் நடனமாட
பாவையார் குலவை போட
பரிதேர் சகடமாட

அலைமேல் கதிரை போல
விளங்கிடும் அருமதேவ
படையணி பெருமை சாற்ற
புலவர்கள் தமிழும் தீர

கடல் மேல் புயலைப்போல
கலங்கல் விரைந்து பாய
வன்னலை சீராட்ட
தென்புலம் எகும் வீர

விறலியர் கானம் பாட
கணிகையர் நடனம் ஆட
பாவையர் குலவை போட
பரிதேர் சகடமாட

அலைமேல் கதிரைப் போல
விளங்கிடும் அருமதேவ
படையணி பெருமை சாற்ற
புலவர்கள் தமிழும் தீர

கடல் மேல் புயலைப்போல
கலங்கள் விரைந்து பாய
வன்னலை சீராட்ட
தென்புலம் எகும் வீர

வீரா ராஜா வீர
சூரா தீர சூர

கூற்றாகி செல்
காற்றாகி செல்
சர சர சர சரவென
வேல்மழை தான் பெய்திட
பர பர பர பரவென
பாயட்டும் பாய்மரம்

மறவர்கள் வீரம் கான
சமுத்திரம் வெறுவிப் போகும்
உருவிய வாளைக் கண்டு
பிறைமதி நாணிப்போகும்
எதிரிகள் உதிரம் சேர்ந்து
குதிகடல் வண்ணம் மாறும்
உதிர்ந்திடும் பகைவர் தேகம்
கடலுக்கு அன்னமாகும்

புலிமகன் வீரம் கண்டு
பகைப்புலம் சிதறி ஓடும்
சரமழை பெய்தல் கண்டு
கடல் அலை கரைக்கு ஓடும்
அடடா பெரும் வீர
எடடா துடிவாளை
தொடடா சர மாலை
அடுடா பகைவோரை

வீரா ராஜா வீர
சூரா தீர சூர
வீழா சோழ வீர
சீரார் ஞானம் வாழ
வாராய் வாகை சூட

தொடுவோர் பாகைப்போரை
நடுகல் சேர்க்கும் வீர
மாறா காதல் மார
பூவோர் ஏங்கும் தீர
ஆயிரம் வேழம் போல
போர்க்களம் சேரும் சோழ

வேந்தர் ராஜ ராஜ
வாராய் வாகை சூட

எம் தமிழ் வாழ்க வாழ்க
வீர சோழம் வாழ்க
நற்றமிழ் வாழ்க வாழ்க
நல்லோர் தேசம் வாழ்க

எம் தமிழ் வாழ்க வாழ்க
வீர சோழம் வாழ்க
நற்றமிழ் வாழ்க வாழ்க
நல்லோர் தேசம் வாழ்க

எம் தமிழ் வாழ்க வாழ்க
வீர சோழம் வாழ்க
நற்றமிழ் வாழ்க வாழ்க
நல்லோர் தேசம் வாழ்க



# சர்வதேசத்தை கவர்ந்த யாழ்பாண உற்பத்திகள்....

Jetwing Colombo seven இல் நடைபெற்ற coffee திருவிழாவில் பங்குபெற்றிய வள்ளி products coffee அமோக வரவேற்பை பெற்றுள்ளது.

பல நாடுகளை சேர்ந்த விருந்தினர்களின் கவனத்தை பெற்றதனூடாக ஏற்றுமதி சந்தையினை Valli products நிறுவனம் பெற்றுக்கொண்டுள்ளது. யாழில் இருந்து சர்வதேசத்தினரின் நன்மதிப்பை பெற்ற முதன்மை coffeeயாக வள்ளி ப்ரொடக்ட் உற்பத்திகள் அமைந்துள்ளது.




சர்வதேச உற்பத்திகளுக்கு நிகராக Masala coffee, Sukku Malli coffee and cinnamon coffee உற்பத்தி செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது..

# வாழைநாரில் கைவினைப் பொருட்கள்

யாழ்ப்பாணம், நீர்வேலியில் வாழைநாரில் இருந்து தும்பு பிரிதெடுத்து அழகான கைவினைப் பொருட்கள் செய்யப்பட்டு வருகிறது. இது உள்ளூர் மற்றும் வெளி நாட்டவர்களால் அதிகம் விரும்பப்பட்டு வாங்கிச்செல்கின்றனர்.

இந்த உற்பத்திபொருட்களை சந்தைப்படுத்துவதற்கு வடக்கு மாகாண அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தால் மேலும் இவர்களது உற்பத்தியையும் வாழ்வாதா ரத்தினையும் மேம்படுத்தமுடியும்.






## உலகின் தலைசிறந்த 15ஹோட்டல்களில் ஒன்று இலங்கையில்....



உலகில் தலைசிறந்த முதல் பதினைந்து Eco-friendly ஹோட்டல்களில் ஒன்றாக Jetwing Vil Uyana ஹோட்டல், Condé Nast Traveller நிறுவனத்தால் தெரிவு செய்யப்பட்டுள்ளது. சிகிரியாவிற்கு மிக அருகில் கிம்பிஸ்ச எனும் இடத்தில் குறித்த ஹோட்டல் ஜெட்விங் நிறுவனத்தினால் 2006ம் நிறுவப்பட்டது. 150க்கும் மேற்பட்ட பறவைகள் 25க்கும் மேற்பட்ட பாலூட்டிகள், ஊர்வண, நீர்வாழ் உயிரனங்கள் என பற்பல ஜீவராசிகளுடன் ஒன்றித்து வாழக்கூடிய வகையில் குறித்த ஹோட்டல் அமையப்பெற்றுள்ளதால் உலகில் தலைசிறந்த முதல் 15 Eco-friendly ஹோட்டல்களில் ஒன்றாக மாறியுள்ளது.

## நவீன மின்சார கார்





மின்சாரத்தில் இயங்கும் கார் ரஸ்ய நாட்டின் ATOM நிறுவனத்தில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. 2025ம் வருடம் விற்பனைக்கு வரவுள்ள இக் கார் இப்பொழுது மக்கள் பார்வைக்கு காட்சிபடுத்தப்பட்டுள்ளது..

7விநாடிகளில் 100கிலோ மீட்டர் வேகத்தை எட்டிவிடக்கூடிய இக் கார்கள் ஒரு முறை சார்ஜ் ஏற்றினால் 500கிலோமீட்டர் வரை செல்லக்கூடிய வகையிலும் தானாக இயங்கக்கூடிய வசதியிலும் உருவாக்கப்பட்டுள்ளது. இவ் வருடம் அறிமுகம் செய்யப்பட்டுள்ள மின்சார கார்களில் அதிக வரவேற்பை பெற்ற காராக இவை மாறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## டுபாயில் இலங்கை பலாப்பழம்




டுபாயில் ஒரு கிலோ "இலங்கை பலாப்பழம்" சுமார் 900 ரூபாயிற்கு விற்பனையாகிறது...




# வல்வை முத்துமாரி அம்மன் ஆலய இந்திரவிழா - 2023









கி.பிரசாந்

# பொன்னியின் செல்வனும் வரலாறும்

## -ஒரு ஒப்பாய்வு-

### அறிமுகம்

பண்டைத் தமிழகத்தின் மூவேந்தர்களுள் ஒருவராகச் சிறப்புப் பெற்ற சோழர்களின் ஆட்சியை தமிழகத்தில் மீள நிறுவியவன் விசயாலய சோழன் ஆவான். இவன் வழிவந்த முதலாம் பராந்தகன் ஆட்சிக்காலத்தில் சோழ அரசு வலிமை பெறத் துவங்கியது. முதலாம் பராந்தகனுக்குப் பின் அவனது இரண்டாவது மகனான கண்டராதித்தன் பொ.ஊ. 955ல் சோழநாட்டின் மன்னனாக முடிசூட்டிக் கொண்டான். இவன் திருவிசைப்பா பாடிய ஒன்பதின்மருள் ஒருவனாவான். மேலும், சிதம்பரக் கோயிலின் கூரையைப் பொன்னால் வேய்ந்தவனும் இவனே. இவன் தனது வாழ்நாளில் சமயப் பணிகளில் பெரும்பாலான காலத்தைச் செலவிட்டதால் இவனது ஆட்சியதிகாரம் வலுவிழந்திருந்தது. இவ் வாய்ப்பைப் பயன்படுத்தி வடக்கே இராட்டிரகூடர்கள் தொண்டை மண்டலப் பகுதியை மீளத் தமது ஆட்சியின் கீழ்க் கொண்டுவந்தனர். தெற்கே பாண்டியர் சோழர்களின் மேலாதிக்கத்தை உதறித்தள்ளி தமது பாண்டியநாட்டை மீட்டுக் கொண்டனர். இதனால், சோழநாட்டின் பரப்பு சுருங்கியது.

கண்டராதித்தன் வீரநாரணி எனும் மங்கையைத் திருமணம் செய்துகொண்டான். எனினும் இவர்கட்குக் குழந்தைபேறு வாய்க்கவில்லை. மேலும், கண்டராதித்தன் பட்டத்துக்கு வருமுன்பே, இவனது மனைவி இறந்துவிட்டாள். கண்டராதித்தன் தனது வாழ்வின் இறுதிக்காலத்தில் மழவரையர் மரபில் வந்த செம்பியன்மாதேவியை இரண்டாம் முறையாகத் திருமணம் புரிந்தான். இவர்களிருவருக்கும் ஒரு புதல்வன் பிறந்தான். இவனே

மதுராந்தகன் எனவும் உத்தமன் எனவும் பின்னாளில் அறியப்பட்டான். கண்டராதித்தனின் இறுதிக்காலத்தின் போதும் மதுராந்தகன் சிறு குழந்தையாயிருந்தமையால் நாட்டின் எதிர்காலத்தைக் கருதி தனது தம்பியான அரிஞ்சயனுக்குப் பட்டம் சூட்டுவித்தான். மேலும், அரிஞ்ச யனுக்குப் பின் சோழநாட்டின் ஆட்சியதிகாரம் அரிஞ்சயனின் வழிவந்தோருக்கே கிடைக்கும் வழிசெய்தானெனவும் தெரிகிறது.

பொ.ஊ. 956ல் ஆட்சிப்பீடமேறிய அரிஞ்சயன் ஓராண்டிலேயே ஆற்றூர் எனுமிடத்தில் இறந்து "ஆற்றூர்த் துஞ்சிய தேவர்" எனும் பெயர் பெற்றான். இவனுக்கும் வைதும்பராயர் மகளான கல்யாணிக்கும் பிறந்த இரண்டாம் பராந்தகன் அரிஞ்சயனுக்குப் பின் ஆட்சிக்கு வந்தான். இவன் சுந்தர சோழன் எனவும் அழைக்கப்பட்டான். இரண்டாம் பராந்தகனுக்கும் திருக்கோவலூர் மலையமான் புதல்வியாகிய வானவன் மாதேவிக்கும் மூன்று பிள்ளைகள் பிறந்தனர். இவர்களுள் முதலாமவன் ஆதித்த கரிகாலனும், இவனுக்குப் பின் குந்தவையும் இறுதியாக இராசராசன் எனும் பெயருடன் பின்னாளில் அரியணையேறிய அருண் மொழிவர்மனுமாவர். இரண்டாம் பராந்தகன் தனது ஆட்சிக்காலத்தில் சோழநாட்டை விரிவாக்கும் முயற்சிகளில் ஈடுபட்டான். வடக்கே தனது பாட்டனான முதலாம் பராந்தகன் ஆட்சிக்காலத்தில் இழந்த தொண்டைமண்டலத்தை இராட்டிரகூடரிடமிருந்து மீளக் கைப்பற்றினான். மேலும், தெற்கே பாண்டியர் ஆளுகையில் இருந்த மதுரையையும் கைப்பற்றிக் கொண்டான்.

இவனது ஆட்சிக்காலத்தில் மதுரையை மூன்றாம் இராசசிம்மப் பாண்டியனின் மகனாகிய வீரபாண்டியன் ஆட்சி செலுத்தி வந்தான். பொ.ஊ. 953ல் சோழர்களுக்கும் வீர பாண்டியன் தலைமையிலான பாண்டியருக்குமிடையே நடைபெற்ற போரில் வீரபாண்டியன் சோழ மரபைச் சேர்ந்த இளவரசன் (முதலாம் பராந்தகனின் புதல்வனான உத்தமசீலி) ஒருவனைக் கொன்றிருத்தல் வேண்டும். வீரபாண்டியனின் ஆறாம் ஆட்சியாண்டிலிருந்து பின்வந்த பாண்டிய நாட்டுக் கல்வெட்டுக்களில் இவன் "சோழன் தலைகொண்ட கோ வீரபாண்டியன்" என



குறிப்பிடப்பட்டுள்ளதிலிருந்து இதனை உறுதிப்படுத்தலாம்.

எனவே, சோழ இளவரசன் ஒருவனின் இறப்புக்குக் காரணமான வீரபாண்டியனைப் பழிதீர்க்கும் எண்ணமும், பாண்டியநாட்டை மீளக்கைப்பற்றும் பேரவாவும் இரண்டாம் பராந்தகனுக்கு இருந்திருத்தல் வேண்டும். இவன் தனது மூத்த மகனாகிய ஆதித்த கரிகாலனோடு இணைந்து பாண்டிய நாட்டின்மீது படையெடுத்துச் சென்றான். சேவூர் எனுமிடத்தில் இடம்பெற்ற போரில் பாண்டியரும் அவர்களுக்கு உதவி புரிய வந்த ஈழத்துப் படைகளும் சோழரிடம் தோல்வியுற்றன. வீரபாண்டியன் தலைமறைவானான். இப்போரில் ஈழத்து மன்னன் நான்காம் மகிந்தன் பாண்டியருக்கு உதவியாகப் பெரும்படையனுப்பியமை பற்றி ஈழத்தைத் தாக்கும் நோக்கில், இரண்டாம் பராந்தகன் பொ.ஊ. 965ல் தனது படைத்தலைவனும் கொடும்பாளூர் எனும் குறுநில மன்னனுமாகிய பராந்தகன் சிறிய வேளான் என்பவன் தலைமையில் பெரும்படையை அனுப்பினான். எனினும், அப்போரில் சோழப்படைகள் தோற்றதோடு படைத்தலைவனாகிய சிறிய வேளான் சாவைத் தழுவினார்.



## சோழர் மீள் வெற்றியும் எதிர்பாராத திருப்பமும்

இத்தோல்வியின் விளைவாக வீரபாண்டியனும் மீண்டும் மதுரையைக் கைப்பற்றி ஆட்சிபுரியலானான். எனவே பாண்டியநாட்டை மீளக்கைப்பற்றும் நோக்கில் கொடும்பாளூர் வேள், தொண்டைநாட்டுச் சிற்றரசனாகிய பார்த்திபேந்திரவர்மன் மற்றும் தனது மகனான ஆதித்தகரிகாலன் தலைமையில் மீண்டும் ஒரு பெரும்படையை இரண்டாம் பராந்தகன் அனுப்பினான். பொ.ஊ. 966ல் சேவூர் எனுமிடத்தில் நடைபெற்ற இப்போரில் பாண்டியப் படைகள் தோற்கடிக்கப்பட்டதோடு, ஆதித்தகரிகாலன் வீரபாண்டியனைப் போரிலே கொன்றான். இவ்வீரச்செயலைப் போற்றி ஆதித்த கரிகாலன் பொ.ஊ. 966ல் இளவரசனாக அறிவிக்கப்பட்டான்.

எனினும், எதிர்பாராத ஒரு திருப்பமாக பொ.ஊ. 969ல் ஆதித்த கரிகாலன் கொலைசெய்யப்பட்டான். ஆதித்த கரிகாலனின் கொலை பிற்காலச் சோழர் வரலாற்றில் ஒரு திருப்புமுனையான நிகழ்வாகும். ஏனெனில், இரண்டாம் பராந்தகனுக்குப் பின்னர் சோழப் பேரரசின் மன்னனாக ஆதித்த கரிகாலனே பட்டத்து இளவரசனாக்கப்பட்டிருந்தான். இவனது கொலை சோழ மரபுவழியில் மாற்றங்களை உண்டாக்கியது. ஆதித்த கரிகாலனின் இறப்பால் சொல்லொணாத் துயருற்ற இரண்டாம் பராந்தகன் பொ.ஊ. 973ல் உயிர் நீத்தான். இரண்டாம் பராந்தகனுக்குப் பின் கண்டராதித்தனின் மகனாகிய

மதுராந்தகன் உத்தம சோழன் எனும் பெயருடன் அரியணையேறினான்.

ஆதித்த கரிகாலனின் படு கொலையைப் பின்புலமாகக் கொண்டு புனையப்பட்ட புதினமே கல்கி எழுதிய "பொன்னியின் செல்வன்" ஆகும். இப்புதினம் "கல்கி" கிருட்டிணமூர்த்தியின் ஆக்கங்களுள் மிகவும் புகழ்பெற்றதாகும். எனினும், இப் புதினத்தில் கல்கி விவரித்துள்ள பல தகவல்கள் ஆசிரியரின் முழுப் புனைவாக இருப்பதால் வரலாற்றிலிருந்து மாறுபடுகின்ற தகவல்களை அடுத்து நோக்குவோம்.

## வரலாற்றோடு முரண்படும் பொன்னியின் செல்வன் புதினம்

பொன்னியின் செல்வன் வரலாற்று நிகழ்வுகளின் அடிப்படையில் புனையப்பட்ட ஒரு புதினமேயன்றி ஒரு வரலாற்று ஆவணமன்று. இப் பிரிவில், இவ்வாய்வுக்குத் தேவையான பொன்னியின் செல்வன் புதினத்திலுள்ள சில தகவல்களின் உண்மைத் தன்மை ஆராயப்படுகிறது.

முதலில், இப் புதினத்தில் காணப்படும் கற்பனைப் பாத்திரங்களைப் பார்க்கலாம். "ஊமை ராணி" எனக் குறிக்கப்படும் மந்தாகினி தேவி ஒரு கற்பனைப் பாத்திரமாகும். "கல்கி" கிருட்டிணமூர்த்தி இப் பாத்திரத்தை அமைப்பதற்கு அடிப்படையாய் அமைந்தது இராசராசன் தனது ஆட்சிக்காலத்தில் அமைத்த சிங்கள நாச்சியார் கோவிலாகும். எனினும், இக்கோவில் கண்ணகிக்கு அமைக்கப்பட்ட கோவிலாகும். பழங்காலத்தில் தமிழகமெங்கும் பரவியிருந்த கண்ணகி வழிபாடு, பிற்காலத்தில் சேர நாட்டிலும் ஈழ நாட்டிலும் மட்டுமே எஞ்சியிருந்தது. இதனால், கண்ணகித் தெய்வம் "சிங்கள நாச்சியார்" என அறியப்பட்டது. இராசராசன் தனது ஆட்சியின்போது கண்ணகி வழிபாட்டை மீண்டும் சோழநாட்டுக்குக் கொண்டுவந்து, கண்ணகிக்குக் கோவிலமைத்தான் [1]. இதனையே கல்கி அவர்கள் தவறாகப் புரிந்துகொண்டு "ஊமை ராணி" எனும் கதாப்பாத்திரமாகப் புனைந்துள்ளார்.

எனவே, இரண்டாம் பராந்தகன் ஈழ நாட்டில் மந்தாகினி தேவி எனும் பெண்ணைச் சந்தித்துக் காதல் கொண்டதாகக் கல்கி குறிப்பிடுவது முற்றிலும் கற்பனையே. அத்தோடு, மந்தாகினியின் பிள்ளைகளாகக் குறிக்கப்படும் நந்தினியும், போலி மதுராந்தகனும் கூடக் கற்பனைப் பாத்திரங்களே. மந்தாகினியின் உடன் பிறந்தவராகக் கூறப்படும் வாணி அம்மையும், அவரது வளர்ப்பு மகனாகவும், உண்மையான மதுராந்தகன் எனவும்



சித்தரிக்கப்படும் சேந்தன் அமுதனும் வளமான கற்பனையே. இதிலிருந்து, பொன்னியின் செல்வன் புதினத்தின் அடிப்படைக் கதைக்கரு முழுப் புனைவே என அறியலாம்.

அடுத்து, பழுவேட்டரையர்கள் குறித்தான கல்கியின் புனைவை நோக்குவோம். கல்கி தனது புதினத்தில், பழுவேட்டரையர்கள் மதுராந்தகனுக்குப் பட்டம் சூட்டும் வகையில் சதி புரிவதாகப் புனைந்துள்ளார். எனினும், பழுவேட்டரையர் மரபினர் முதலாம் பராந்தகன் காலத்திலிருந்தே சோழ அரசின் நம்பிக்கைக்குரியவர்களாக இருந்துள்ளனர். மேலும், அன்பில் செப்பேடுகளின் படி, முதலாம் பராந்தகனின் மனைவியும், அரிஞ்சய சோழனின் தாயுமாகிய சேர இளவரசி, பழுவேட்டரையர் மரபில் வந்தவளாவாள் [2]. அத்தோடு பழுவேட்டரையர்கள், இராசராசன் மற்றும் அவன் மகனாகிய இராசேந்திரன் காலத்திலும் கூட சோழருக்கு அடங்கிய சிற்றரசர்களாக ஆட்சி புரிந்ததோடு, இராசராசனின் மனைவியருள் இருவர் பழுவேட்டரையர் மரபினர் என்பதும் குறிப்பிடத்தக்கது [3]. எனவே, சோழப் பேரரசின் உற்ற தோழர்களாக விளங்கிய பழுவேட்டரையர் மரபினர் சோழ நாட்டுக்கெதிராகச் சதிச்செயல் புரிந்தனர் என்பதும் எவ்வகையிலும் ஏற்கத்தகாத கருத்தாகும்.



பொன்னியின் செல்வன் புதினம் குற்றம் சாட்டும் இறுதி மற்றும் முக்கிய நபர் மதுராந்தக உத்தம சோழனாவான். இதன் உண்மைத் தன்மை குறித்தும் ஆதித்த கரிகாலன் கொலையின் உண்மையான குற்றவாளிகள் குறித்தும் எஞ்சிய பகுதிகளில் ஆராய்வோம்.

## ஆதித்த கரிகாலன் கொலையின் மர்மங்கள்

ஆதித்த கரிகாலனைக் கொன்றவர் யாவர் என்பதைத் தீர்மானிப்பது சற்றே சிக்கலானது. எனினும், சில கல்வெட்டு மற்றும் செப்பேட்டு ஆதாரங்கள் இச் சிக்கலைத் தீர்க்கத் துணை புரிகின்றன.

இவற்றுள் லெய்டன் செப்பேடுகள் பற்றி முதலில் பார்க்கலாம். லெய்டன் செப்பேடுகள் என்பன நெதர்லாந்து நாட்டின் லெய்டன் நகரில் பேணப்பட்டு வருவதால் இவை இப்பெயர் பெற்றன. இரு தொகுதிகளாகக் காணப்படும் இவை முறையே லெய்டன் பெரிய செப்பேடுகள் மற்றும் லெய்டன் சிறிய செப்பேடுகள் என அழைக்கப்படுகின்றன. இவற்றுள் லெய்டன் பெரிய செப்பேடுகள் ஆதித்த கரிகாலன் வீரபாண்டியனுடன் போர் புரிந்தமை பற்றி தகவல்களைத் தருகின்றன. இச் செப்பேடுகளில் நாகப்பட்டினம் சூடாமணி பௌத்த விகாரத்துக்கு ஆனைமங்கலம் எனும் ஓர் ஊரை நிவந்தமாக அளித்தமை

பற்றிக் கூறப்படுவதால் இவை "ஆனைமங்கலச் செப்பேடுகள்" எனவும் குறிப்பிடப்படுகின்றன. இதன் முதற்பகுதி சமசுகிருதத்திலும் இரண்டாம் பகுதி தமிழிலும் உள்ளது. இதிலுள்ள சமசுகிருதப் பகுதியில் ஆதித்த கரிகாலன் சிறுவயதினனாயிருக்கையிலேயே வீரபாண்டியனுடன் போர்புரிந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மதங்கொண்ட யானைகளோடு சிங்கக் குட்டி விளையாடுவது போன்று வீரபாண்டியனுடன் இவன் போர் செய்தான்.

திருவாலங்காட்டுச் செப்பேடுகள் சற்றே மாறுபட்ட செய்திகளைத் தருகின்றன. இச் செப்பேடுகளின் சமசுகிருதப் பகுதிகளிலுள்ள தகவல்களின் படி, இரண்டாம் பராந்தகனுக்குப் பின் ஆதித்த கரிகாலன் அரசுபுரிந்ததாகவும் போரிலே பாண்டியனைக் கொன்றதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், பின்வரும் தகவல்களை அது தருகிறது.

பாண்டியன் தலைகொண்டவனாகிய ஆதித்த கரிகாலன் விண்ணுலகைக் காணும் ஆசையினால் மறைந்தான். வலிமை மிக்க கலியின் கும்மிருட்டைப் போக்கும் நோக்கில் அருண்மொழிவர்மனையே மன்னானாகுமாறு அவன் மக்கள் வேண்டிக்கொண்ட போதும் அருண்மொழி அரசபதவியை விரும்பவில்லை. அத்துடன் அரசு அறத்தின் படி, அரசுப் பதவியை விரும்பிய தனது சிற்றப்பாவாகிய மதுராந்தகரிடம் அரசுப் பொறுப்பை ஒப்படைத்தான். மதுராந்தகனாகிய உத்தம சோழன் தனக்கடுத்துப் பட்டத்துக்குத் தகுதியானவன் அருண்மொழியே எனக்கண்டு அவனை இளவரசனாக்கினான். உத்தம சோழனுக்குப் பின் அருண்மொழி வர்மன் முடிசூட்டிக்கொண்டான்.

ஆதித்த கரிகாலன் கொலை பற்றிய இன்றியமையாத தகவல்களைத் தரும் மூலம் உடையார்குடிக் கல்வெட்டுக்களாகும். இராசராசன் ஆட்சியின் இரண்டாம் ஆண்டின்போது வெட்டப்பட்ட இது தற்போதைய தமிழ்நாட்டின் கடலூர் மாவட்டத்தின் காட்டுமன்னார்கோயில் எனுமிடத்தில் உள்ளது. இக் கல்வெட்டு ஆதித்த கரிகாலன் "மேலக்கடம்பூர்" எனுமிடத்தில் கொலைசெய்யப்பட்டதாகக் குறிப்பிடுகிறது. மேலும், இக் கொலைக் குற்றத்துக்காக "வீரநாராயண சதுர்வேதி மங்கலத்து சபை"யினால் சிலருடைய சொத்துக்கள் பறிமுதல்செய்யப்பட்டு விற்கப்பட்டதாகத் தெரிவிக்கிறது.



அக்கல்வெட்டுத் தகவல்கள் பின்வருமாறு:
ஸ்வஸ்தி ஸ்ரீ கோ ராஜகேசரிவர்மர்க்கு யாண்டு 2 ஆவது வடகரை பிரமதேயம் ஸ்ரீ வீரநாராயண சதுர்வேதி மங்கலத்து பெருங்குறி பெருமக்களுக்கு சக்கரவர்த்தி ஸ்ரீமுகம் **பாண்டியனைத் தலைகொண்ட கரிகால சோழனைக் கொன்று துரோகிகளான சோமன்.............. தம்பி ரவிதாசனான பஞ்சவன் பிரம்மாதிராஜனும் இவன்றம்பி பரமேஸ்வரன் ஆன இருமுடிச் சோழ பிரம்மாதிராஜனும் இவர்கள் உடப்பிறந்த மலையனூரானும்** இவர்கள் தம்பிமாரும் இவர்கள் மக்களிடும் இவர் பிரமாணிமார் பெற்றாளும் இ....................... ராமத்தம் பேரப்பன் மாரிடும் இவர்கள் மக்களிடம் இவர்களுக்குப் பிள்ளை குடுத்த மாமன்மாரிடும் தாயோடுடப் பிறந்த மாமன் மாமன்மாரிடும் இவர்கள் உடபிறந்த பெண்களை வேட்டாரினவும் இவர்கள் மக்களை வேட்டாரினவும் ஆக இவ்வனைவர் (முடமை)யும் நம் ஆணைக்குரியவாறு கொட்டயூர் பிரம்ம ஸ்ரீராஜனும் புள்ளமங்கலத்து சந்திரசேகர பட்டனையும் பெறத்தந்தோம். தாங்களும் இவர்கள் கண்காணியோடும் இவர்கள் சொன்னவாறு நம் ஆணைக்குரியவாறு



குடியோடு குடிபெறும் விலைக்கு விற்றுத்தலத்திடுக இவை குருகாடிக்கிழான் எழுத்து என்று இப்பரிசுவரஇ ஸ்ரீமுகத்தின் மேற்பட்ட **மலையனூரான் ஆன பாப்பனச்சேரி ரேவதாச கிரமவித்தனும்** இவன் மகனும் இவன்றாய் பெரிய நங்கைச்சாணியும் இம்மூவரிதும் ஆன நிலம் ஸ்ரீ வீரநாராயன சதுர்வேதி மங்கலத்து மிப்பிடாகை தேவமங்கலம் ஆன பட்டில நிலம் ஸ்ரீவீரநாராயண சதுர்வேதி மங்கலத்து சபையார் பக்கல் வெண்ணையூர் நாட்டு வெண்ணையூருடையான் நக்கன் அரவணையானான பல்லவ முத்தரைய மகன் பரதனான வியாழகஜமல்லப் பல்லவரையனேன் இந்நிலம் பழம்படி இரண்டே முக்காலே ஒருமாவும் அகமனை ஆறும் ஆக இந்நிலமும் இம்மனையும் நூற்றொருபத்தி ருகழஞ்சு பொன் குடுத்து விலைகொண் டிவ்வூர் திருவனந்தீஸ்வரத்து பட்டாரகர் கோயிலிலே இவ்வாட்டை மேஷ நாயற்று நாயற்றுக்கிழமை பெற்ற புரட்டாசி ஞான்று சந்திராதித்தவர் ஆழ்வார் கோயில் முன்பு மூவாயிரத்தரு நூற்றுவனான நிலையம்பலத்து தண்ணீர் அட்டும் பிராமணன் ஒருவனுக்கு நிச தம் படி நாழி நெல்லும் ஆட்டைவட்டம் ஒரு காகம் நிசதம் பதினைவர் பிராமணர் உண்பதற்கு ஆக பதினாறு இவருள் ஐவர் சிவயோகிகள் உண்ணவும் வைத்தேன் அரையன் பரதன் ஆன வியாழகஜமல்ல பல்லவரையனேன் இதர்மம் ரஷிகின்ற மகாசபையார் ஸ்ரீபாதங்கள் என் தலை மேலன

இராசகேசரியாகிய முதலாம் இராசராசனின் இரண்டாம் ஆட்சியாண்டில் நடைபெற்ற ஒரு நில விற்பனை தொடர்பான தகவல்களை இது தருகின்றது. இக் கல்வெட்டின்படி, ஆதித்த கரிகாலனைக் கொன்றோர் சோமன், ரவிதாசன், பரமேசுவரன் மற்றும் ரேவதாச கிரமவித்தன் ஆகிய நால்வராவர். இவர்கள் அனைவரும் உடன்பிறந்தவர்களாவர்.

## உத்தம சோழனின் தொடர்பு

ஆதித்த கரிகாலன் கொலை தொடர்பில் சில வரலாற்றாய்வாளர்கள் உத்தம சோழனைக் குற்றவாளியாகக் கருதுகின்றனர். எனினும், உத்தம சோழனுக்கு இக்கொலையில் தொடர்புண்டா எனச் சற்று நோக்குவோம்.


1. திருவாலங்காட்டுச் செப்பேடுகளின் படி, ஆதித்த கரிகாலனின் பின்பு தனது சிற்றப்பனாகிய மதுராந்தக உத்தம சோழனே அரசுபுரியும் வகையில் இராசராச சோழன் தனது உரிமையை விட்டுத்தந்தான் என அறியமுடிகிறது. மதுராந்தகனும் தனக்குப் பின் அரசனாக இராசராசனுக்குப் பட்டம் கட்டுவித்தான்.

2. முதலாம் இராசராச சோழன் தன்னுடைய மகனுக்கு மதுராந்தகன் என்றே பெயரிட்டான். இவனே, பின்னர் இராசேந்திர சோழன் எனும் பட்டத்தோடு இராசராசனுக்குப் பின் அரியணையேறியவனாவான்.

3. உத்தம சோழனின் மகனாகிய மதுராந்தகன் கண்டராதித்தன் என்பாரை இராசராசன் தனது ஆட்சியின் கீழ் கோயில்களைக் கண்காணிக்கும் பொறுப்பில் அமர்த்தியிருந்தான். கோயில் நிர்வாகங்களைக் கண்காணித்து தவறிழைத்தோருக்குத் தண்டனை வழங்குதல் இவனுக்கான பணியாக இருந்தது.

4. உடையார்குடிக் கல்வெட்டுக்கள், இராசராசன் பட்டத்துக்கு வந்த இரண்டாம் ஆட்சியாண்டின் நிகழ்வைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. மேலும், இக் கல்வெட்டு ஆதித்த கரிகாலன் கொலைக்கான தண்டனையின் மூலம் பறிமுதல் செய்யப்பட்ட உடைமைகளின் விற்பனை தொடர்பானதேயன்றி, ஆதித்த கரிகாலன் கொலை வழக்கின் விசாரணையோ அல்லது தீர்ப்போ தொடர்பானதல்ல.

உத்தமன் ஆதித்த கரிகாலனின் கொலையில் தொடர்புற்றிருந்திருப்பின் ஆதித்த கரிகாலன் தம்பியாகிய அருண்மொழிவர்மன் கட்டாயம் உத்தமனுக்கு எதிராகக் கிளர்ந் தெழுந்திருக்க வாய்ப்புண்டு. உத்தம சோழன் தனது அண்ணனாகிய ஆதித்த



கரிகாலனைக் கொலைசெய்வித்தது உண்மையானால், அவன் பெயரையே இராசராசன் தனது மகனுக்கும் இட்டிருப்பானா என்பதும் ஐயத்துக்கிடமானதே. மதுராந்தக உத்தமசோழன், தனது அண்ணனாகிய ஆதித்த கரிகாலனைக் கொன்றது உண்மையாயின், மதுராந்தகன் மகனுக்குத் தனது ஆட்சியில் உயர் அதிகாரிப் பொறுப்பை இராசராசன் வழங்கியிருப்பானா என்பதும் ஈண்டு நோக்கற்பாலது. எனவே, உத்தம சோழனுக்கு இக்கொலையில் தொடர்புண்டா என்பது ஐயத்துக்கிடமானது. மேலும், உத்தம சோழன் குற்றவாளியாக்கப்படும் பட்சத்தில், மேலுள்ள ஆதாரங்களின் படி, இராசராச சோழனும் இக்கொலைக்கு உடந்தையாக இருந்தான் என்றே கருதவேண்டியுள்ளது.

மதுராந்தகனுக்கு ஆதித்த கரிகாலன் கொலையில் தொடர்பிருப்பதாகக் கருதும் ஆய்வாளர்கள் மதுராந்தக உத்தம சோழன் ஆட்சியில் கொலையாளிகள் தண்டிக்கப்படவில்லை என வாதிட்டுத் தமது கருதுகோளுக்கு நியாயம் கற்பிக்கின்றனர். எனினும், மதுராந்தக உத்தம சோழன் பதினைந்து ஆண்டுகள் என்னும் குறுகிய காலம் மட்டுமே ஆட்சியில் இருந்தான் என்பதை நாம் இங்கு கருத்திற் கொள்ள வேண்டும். மேலும், உடையார்குடிக் கல்வெட்டுக்கள், இராசராசன் பட்டத்துக்கு வந்த இரண்டாம் ஆட்சியாண்டில், தண்டிக்கப்பட்ட கொலையாளிகளின் உடைமைகளின் விற்பனையைப் பற்றிக் கூறுவதால், உத்தம சோழன் ஆட்சியிலேயே இக் கொலைவழக்குக்கான விசாரணைகள் தொடங்கியிருத்தல் வேண்டும். உத்தம சோழன் ஆட்சிக்காலத்திலேயே கொலையாளிகள் கண்டுபிடிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட்டிருப்பதற்கும் வாய்ப்புண்டு. ஆகவே, மேற்போந்த வாதங்கள் மதுராந்தக உத்தம சோழன் மீது சாட்டப்பட்டுள்ள குற்றத்துக்கு எதிராக உள்ளன.

## பார்ப்பனர் தொடர்பு

மேற்போந்த ஆய்வுகளின் மூலம் பொன்னியின் செல்வன் புதினத்தினூடாகக் குற்றவாளிகளாக்கப்பட்ட எவருமே ஆதித்த கரிகாலனின் கொலையுடன் தொடர்புபடவில்லை என்பது தெளிவு. எனவே, ஆதித்த கரிகாலனை உண்மையில் கொன்றோர் யாவர் எனத் தற்போது ஆராய்வோம். உடையார்குடிக் கல்வெட்டுக்கள் கொலையாளிகளை மிகத் தெளிவாகவே அடையாளங் காட்டியுள்ளது. அவர்களது பெயர்களை நாம் தெளிவாக அறியக் கூடியதாயுள்ளது. இக் கொலையாளிகளின் அடையாளங்களையும் இக் கல்வெட்டே மிகத் தெளிவாக எடுத்துரைக்கின்றது. இக் கல்வெட்டின்படி கொலையாளிகளுள் ஒருவனான ரவிதாசன், “பஞ்சவன் பிரம்மாதிராஜன்” என்னும் பட்டப்பெயரைக் கொண்டுள்ளான். சோமன் என்பவனின் பட்டம் கல்வெட்டில் சிதைந்துள்ளது. அதேபோல, பரமேசுவரன் என்பவன், “இருமுடிச்சோழ பிரம்மாதிராஜன்”

எனும் பட்டத்தைக் கொண்டுள்ளான். இவ்விரு பட்டங்களும் முறையே பாண்டிய நாட்டிலும், சோழ நாட்டிலும் அரசு உயர் பதவிவகித்த பார்ப்பனர்களுக்கு வழங்கப்படும் பட்டங்களாகும். எனவே, ரவிதாசன் மற்றும் பரமேசுவரன் ஆகிய இருவரும் முறையே பாண்டிய மற்றும் சோழ நாட்டுப் பார்ப்பன உயரதிகாரிகள் என்பது திண்ணம். மேலும், சோமன் என்பவனின் பெயர் முதலாவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளதால், இவனும் பாண்டிய நாட்டுப் பார்ப்பன உயரதிகாரியாக இருப்பதற்கு வாய்ப்புக்கள் மிகுதியாக உண்டு. நான்காமவனான ரேவதாச கிராமவித்தன் என்பவன் இவர்களின் உடன்பிறந்தானாக இருப்பதனால், இவனும் ஒரு பார்ப்பனன் ஆவான். மேலும், இவன் பாப்பனச் சேரி எனுமிடத்தில் வசித்ததாகக் குறிப்பிடப்பட்டிருப்பது இம் முடிவுக்கு மேலும் வலுச்சேர்க்கிறது.

இம்முடிவுக்கு மேலும் வலுச்சேர்ப்பது காந்தளூர்ச் சாலைப் போராகும். இப்போர் இராசராசன் பட்டத்துக்கு வந்த நான்காம் ஆட்சியாண்டில், அதாவது பொ.ஊ. 988ல் நிகழ்ந்ததாகும். மேலும், இராசராசன் ஆட்சிக்கு வந்த பின்னர் அவன் தொடுத்த முதலாவது போரும் இதுவேயாகும். இப்போரில் சோழர்கள் பெற்ற வெற்றி சிறப்பாகக் குறிப்பிடப்படுகின்றது. இராசராசனின் நான்காம் ஆட்சியாண்டு, அதாவது பொ.ஊ.988 மற்றும் அதற்குப் பின்னரான இராசராசனின் பெரும்பாலான கல்வெட்டுக்களில் “காந்தளூர்ச் சாலைக் கலமறுத்த” எனும் சொற்றொடர் இடம்பெற்றிருப்பதைக் கொண்டு இதனை நாம் அறிந்துகொள்ளலாம் [4][5]. தமிழ்நாட்டின் திருவண்ணாமலையில் கண்டெடுக்கப்பட்ட இராசராசனின் கல்வெட்டொன்றில் “சாலைய் கலமறுத்து அங்குள்ள மலைஆளர் தலை அறுத்த” எனும் சொற்றொடர் காணப்படுகிறது [6]. இதிலிருந்து, காந்தளூர்ச் சாலை என்பது சேரர் ஆட்சிக்குட்பட்ட பகுதி என்பதை அறிந்து கொள்ளலாம். சாலை என்பது பிரம்மச்சரிய விரதம் மேற்கொண்ட, ஆயுதம் தாங்கிய, ”சதிரர்” என அழைக்கப்படுகின்ற, பார்ப்பனர்களுக்கான பல்நோக்குப் பயிற்சி மையங்களாகும். இம் மையங்களில், வேதப் படிப்புக்களும் இராணுவப் பயிற்சிகளும் கற்றுத் தரப்பட்டன [7]. இச் சாலை எனும் பயிற்சி மையத்தை இராசராசன் தாக்கியதற்கான காரணம் என்னவென உறுதியாகத் தெரியவில்லை. எனினும், இந் நிகழ்வை ஆதித்த கரிகாலனின் படுகொலையோடு பொருத்திப் பார்க்கும்போது, சில விடயங்கள் புலப்படுகின்றன. இக் காந்தளூர்ச் சாலைப் பயிற்சி மையத்தில்,



ஆதித்த கரிகாலனைக் கொன்ற பார்ப்பனர்கள் பயிற்சி பெற்றிருக்கக் கூடும். இதன் மூலமாக, இராசராசன் தனது அண்ணனின் படுகொலைக்குப் பழிதீர்க்கும் விதமாக இப்போரை நிகழ்த்தியிருக்கக் கூடும்.

## முடிவுரை

இவ்வாய்வின் ஊடாக, சோழ மற்றும் பாண்டிய நாட்டைச் சேர்ந்த அரசு உயர்பதவி வகித்த நான்கு பார்ப்பனர்களே ஆதித்த கரிகாலனைப் படுகொலை செய்தனர் என்பது ஐயந்திரிபற உறுதியாகின்றது. அடுத்து, இவர்கள் இப்படுகொலையைப் புரிந்ததற்கான காரணங்களை ஆராய்வோம். இக் கொலையில் பாண்டிய நாட்டுப் பார்ப்பனர்களின் தொடர்பு இருப்பதனால், வீரபாண்டியனின் கொலைக்குப் பழிதீர்க்கும் விதமாக இப்படுகொலை நிகழ்த்தப்பட்டிருக்கக் கூடும். அதேவேளை, சோழ நாட்டுப் பார்ப்பனர்களின் தொடர்பு, இம்முடிவில் ஐயங்களைத் தோற்றுவிக்கிறது. ஆதித்த கரிகாலன், வைதீக மதத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்த ஒருவனாகவும், பார்ப்பனர்களின் அரசு மேலாதிக்கத்தை விரும்பாதவனாகவும் இருந்திருக்கக் கூடும். இதன் விளைவாக, ஆதித்த கரிகாலன் அடுத்து சோழநாட்டின் பட்டத்துக்கு வருவதை விரும்பாத பார்ப்பனர்கள் இப் படுகொலையைப் புரிந்திருக்கலாம் என்பது இன்னொரு வாதமாகும். இந் நோக்கு, இப்படுகொலையில் சோழநாட்டுப் பார்ப்பனரின் தொடர்பை விளக்கும் விதத்தில் உள்ளது. எனினும், இதுவும் ஒரு கருதுகோளே. இதனை உறுதிப்படுத்துவதற்கு மேலும் ஆதாரங்கள் தேவைப்படுகின்றன. முடிவாக, ஆதித்த கரிகாலனைப் படுகொலை புரிந்தோர் சோழ மற்றும் பாண்டிய நாட்டுப்

## மேற்கோள்கள்


[1] இரா. இராமகுமார், *"நடுகல்லும் சதிகல்லும்", பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், மலர்* 3, *இதழ்* 1, *தொகுதி* 1, *அக்டோபர்* 2018.

[2] S. Swaminathan, "The early Chōḷas history, art, and culture", Sharada Pub. House, 1998. p. 78.


[3] G.V. Srinivasa Rao, "SOUTH-INDIAN INSCRIPTIONS (TEXTS)", Vol. 13 "THE CHOLAS", Department of Archeology, India, 1952. p. VIII.

[4] M. G. S. Narayanan, "Perumals of Kerala: Brahmin Oligarchy and Ritual Monarchy", Thrissur (Kerala): CosmoBooks, 2013 [1972]. 115 - 117.

[5] K. A. N. Sastri, "History of South India", Oxford, 1955. p. 173.

[6] C. *இளங்கோ, "காணக்கிடந்த கல்லும் கண்டுபிடிக்கப்படாத செய்தியும்", புதிய பனுவல்.*

[7] M. G. S. Narayanan, "Kantalur Salai-New Light on Aryan Expansion in South India", Proceedings of Indian History Congress, 1970.





பார்ப்பனரென்பது உறுதியானாலும், அவர்கள் இப்படுகொலையைப் புரிந்ததற்கான நோக்கங்கள் இன்னும் தெளிவற்றவையாகவே உள்ளன. இது தொடர்பிலான அடுத்த கட்ட ஆய்வுகள் நிகழ்த்தப்பட்டு உரிய ஆதாரங்கள் கிடைக்கப்பெறுகையில் இப் படுகொலை தொடர்பான மேற்போந்த ஐயங்கள் நீக்கப்படலாம்.

## வரலாற்றுத் தகவல்களின் படி...

### உதவிய ஏனைய நூல்கள் மற்றும் ஆவணங்கள்


- T. V. சதாசிவ பண்டாரத்தார், "பிற்காலச் சோழர் சரித்திரம் - பகுதி 1", மூன்றாம் பதிப்பு, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1958.
- ஆனைமங்கலச் செப்பேடுகள் - Anaimalai ceppEdukaL / Leiden Plates on South Indian History, projectmadurai.org, 12 Nov. 2021.
- ச. கிருட்டிணமூர்த்தி, "இராசேந்திர சோழனின் திருவாலங்காட்டுச் செப்பேடுகள்", உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 2014.
- வே. மகாதேவன் மற்றும் க. சங்கரநாராயணன், "சோழர் செப்பேடுகள்", தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், சூலை 2013.
- K.A.Nilakanta Sastri, "No.27, The Udayargudi inscription of Rajakesarivarman: A.D. 988", Epigraphia Indica, EDITED BY HIRANANDA SASTRI, K. N. DIKSHIT and N. P. CHAKRAVARTI, Vol.XXI, 1931-32. p.165-170.


## பொன்னியின் செல்வன் நாவலின் படி...





# இலக்கை எய்த இறையருளை வேண்டுகிறோம்...!

துமியின் ஐம்பதாவது மலரை முகர்ந்து மகிழ்ந்த நினைவு உள்ளம் முழுவதும் கமழ்ந்துகொண்டிருக்கையிலேயே அறுபதாவது மலர் எமது கைகளுக்கு வந்து சேர்ந்துள்ளது. மாதந்தோறும் முதல் நாளே நம்மைத் தேடி துமி வந்துவிடுவான். வழமையான, சுவை மிகு அம்சங்களைச் சுமந்துகொண்டு வந்து நிற்பான். அதனால் வாசகர் அவன் வரவை ஆவலுடன் எதிர்பார்ப்பது வழமை.

அதுமட்டுமல்ல. “இருள் பரவிவருகிறது. இருள் எவ்வாறேனும் அகல வழி ஏதேனும் தென்படுகிறதா?” எனத் தவித்தவர்களின் கண்களுக்கு ஓர் ஒளிப்பொட்டு தெரிந்தாலும் நிம்மதியும் மகிழ்வும் கலந்து அவர்களுள் ஊற்றெடுக்குமல்லவா? அதையொத்த மனநிலை துமியின் வரவால் எமக்கும் ஏற்பட்டுள்ளது. இன்றைய இளைஞர்கள் திசை காட்டுவோரின் நோக்கங்களை அறியாது அவர்கள் சுட்டிய அழகொளிர் மின்னிருக்கைகளிலும் தருமப் பொறிகளுள்ளேயும் சிக்கி அழிவதைக் கண்டு கலங்கியோருக்கு துமி விடிவெள்ளியாக ஒளிர்ந்து ஆறுதல் தருகிறது.

பல்துறை சார்ந்த இளைஞர்கள், சமுதாயத்தின் நலனையே நோக்கமாக்க கொண்டு தம் சகோதரர்களுக்கு வழிகாட்டும் வகையில் ஆக்கங்களை உருவாக்கி ஒன்று சேர்த்து துமியில் தந்துவருகின்றனர். இதனால் நம் எதிர்காலம் ஓரளவேனும் வளமுறும் என்ற நம்பிக்கை எம் மனங்களுக்கு சிறிது தெம்பூட்டுகிறது.

ஐம்பதாவது இதழில் “இலக்குகளை அடைவோம்” என பதிவு செய்து தம் உறுதியை வெளிப்படுத்தி அனைவரையும் அதில் இணையுமாறு கோரியிருந்த துமி குழுமத்தினர் நோக்கத்தை அடையும் பாதையில் முன்னேறி வருகின்றனர். அவர்களுக்கு மனமார்ந்த பாராட்டையும் வாழ்த்தையும் தெரிவிக்கிறோம். அதே வேளையில் ஏனையோரது ஒத்துழைப்பு போதியளவு கிடைக்கிறதா? என்ற ஐயமும் தோன்றுகிறது.

ஆய்வின் அரசர்கள் போட்டியை நடத்தியதை இவர்களது செயலூக்கத்திற்கு ஓர் உதாரணமாக இங்கு கூறலாம். இவர்களது நோக்கம் பரிபூரண வெற்றி பெற ஏனையோரின் ஒத்துழைப்பும் அத்தியாவசியமானதாகும். அதனை வழங்கவேண்டியது எமது கடமை. நல்ல திட்டங்கள் நடைமுறைக்கு வரும்போதுதான் பயன் கிடைக்கும். அத்துடன் திசைமாறிச் சென்றுகொண்டிருக்கும் இளையோரின் திறன்களை வாய்க்காலமைத்து நெறிப்படுத்தி அவர்களும் தலை நிமிர்ந்து நிற்கச் செய்யலாம்.

துமி வெற்றி நடை போட்டு தன் இலக்கை எய்தி சிறப்புற்றோங்க அருள்புரியுமாறு எதனுள்ளும் நின்றியங்கும் இறையருளை வேண்டுகிறோம்.

*யோகேஸ்வரி சிவப்பிரகாசம்*
*எழுத்தாளர்*

# இளைய தலைமுறை ஆற்றலாளர் விருது ௨௦௨௩












தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற் செலவர், கலாநிதி.ஆறு.திருமுருகன் பிறந்த நாள் அற நிதியச் சபையின் இந்த ஆண்டிற்கான இளைய தலைமுறை ஆற்றலாளர் விருது இன்று தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் நடைபெற்றது.

கலாநிதி.ஆறு.திருமுருகன் அவர்களது 62வது பிறந்த தினத்தினை முன்னிட்டு இவ் விருது வழங்கும் விழா நடைபெற்றது.

பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் உயர்திரு அ.சிவபாலசுந்தரம் அவர்களும் சிறப்பு விருந்தினராக யாழ் பல்கலைக்கழக விஞ்ஞானத்துறை பீடாதிபதி பு.ரவிராஜன் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

புலம்பெயர்ந்த நாடுகளில் இருந்தும் உள்நாட்டில் இருந்தும் பல அறிஞர்கள் மற்றும் சமூகப் பெரியவர்கள் தொண்டர்கள் மற்றும் பொது மக்கள் என பலர் கலந்து இவ் நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

இவ் விருது வழங்கும் விழாவில் வைத்திய கலாநிதி வேலாயுதப்பிள்ளை அவர்களும் சங்கானை பிரதேச செயலாளர் திருமதி பிறேமினி பெண்ணம்பலம் அவர்களும் இளைய தலைமுறை ஆற்றலாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

ஆய்வு அரசர்கள் போட்டியில் முதலாம் இடம் பெற்ற ஆய்வு

# மாணவர் மத்தியில் கொரோனாவின் தாக்கம்



தெ. வஜிதா

### ஆய்வின் மட்டுப்பாடுகள்

தற்போது நிலவி வருகின்ற கொவிட் -19 பெருந்தொற்றுக் காரணமாக பாடசாலைக்குச் செல்வதற்கு உரிய காலப்பகுதியில் அனுமதி கிடைக்காமை. போக்குவரத்து வசதிகள் இல்லாமையினால் போக்குவரத்தில் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்ததுடன் தகவல் களையும் விரைவாகப் பெற்றுக் கொள்வதில் சிரமங்களை எதிர் கொள்ள வேண்டியிருந்தது. எனவே தகவல்களைப் பெறுவதற்கு நீண்ட நாட்கள் தேவைப்பட்டது. கலைப்பிரிவு மற்றும் வணிகப்பிரிவு மாணவர்கள் ஆய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன் விஞ்ஞான மற்றும் கணிதப்பிரிவு மாணவர்கள் ஆய்விற்கு உட்படுத்தப்படவில்லை.

**ஆய்வின் பொது நோக்கம்**

கல்விப் பொதுத் தராதர உயர்தர மாணவர்களின் கொரோனா பற்றிய அறிவு, உளப்பாங்கு, நடத்தையை மதிப்பிடுதல்

### தரவுப்பகுப்பாய்வு

ஆய்விற்காக வவுனியா வடக்கிலுள்ள க.பொ.த உயர்தரப் பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளது. அவ்வகையில் எளிய எழுமாற்று மாதிரி அடிப்படையில் 101 மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டு இவ் ஆய்வானது அளவுசார், பண்புசார்

**ஆய்வின் சிறப்பு நோக்கங்கள்**

- கல்விப் பொதுத்தராதர உயர்தர மாணவர்களின் கொரோனா பற்றிய அறிவினை மதிப்பிடுதல்
- கல்விப் பொதுத்தராதர உயர்தர மாணவர்களின் கொரோனா பற்றிய உளப்பாங்கினை கண்டறிதல்
- கல்விப் பொதுத்தராதர உயர்தர மாணவர்களின் கொரோனா பற்றிய நடத்தையை இனங்காணல்



ஆய்வு முறையியல் நுட்பங்களினை இணைத்து கலப்புமுறையினைப் (mixed method) பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவை விபரணப் புள்ளிவிபரவியல் முறையிலும் பண்புசார் தரவுகள் கருப்பொருள் ரீதியான தரவுப் பகுப்பாய்விற்கும் உட்படுத்தப்பட்டது. ஆய்விற்குட்படுத்தப்பட்ட 101 மாணவர்களில் 42.6% ஆனவர்கள் ஆண்களாகவும் 57.4% ஆனவர்கள் பெண்களாகவும் காணப்படுவதுடன் இவர்களில் 80.2% ஆனவர்கள் இந்து சமயத்தை சேர்ந்தவர்களாகவும் 19.8மூ ஆனவர்கள் கிறிஸ்தவ சமயத்தை சேர்ந்தவர்களாகவும் காணப்படுகின்றனர்.

வருமானம் குறித்து பார்க்கின்ற போது ஆய்வுக்கு ட்படுத்தப்பட்ட மாணவர்களில் 28.7% ஆனவர்கள் வாரம் ஒன்றிற்கு 1001-1500 ற்கு இடைப்பட்ட வருமானம் பெறும் குடும்பங்களை சேர்ந்தவர்களாகவும் 14.9% ஆனவர்கள வாரம் ஒன்றிற்கு 1000ற்கும் குறைவான வருமானம் பெறும் குடும்பங்களை சேர்ந்தவர்களாகவும் இருப்பதுடன்

| சமூகக் குடித்தொகைக் காரணிகள் | வினாக்கொத்தின் எண்ணிக்கை (Number of Questionaire) | பிரிவுகள் | எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|---|---|
| வயது | 101 | 19 | 101 | 100% |
| பால்நிலை | 101 | ஆண் | 43 | 42.6% |
| | | பெண் | 58 | 57.4% |
| மதம் | 101 | இந்து | 81 | 80.2% |
| | | கிறிஸ்தவம் | 20 | 19.8% |
| குடும்ப மொத்த வார வருமானம் | 101 | ரூ.501 - 1000 | 15 | 14.9% |
| | | ரூ.1001 - 1500 | 29 | 28.7% |
| | | ரூ.1501 - 2000 | 08 | 7.9% |
| | | ரூ.2001 - 2500 | 13 | 12.9% |
| | | ரூ.2501 - 3000 | 27 | 26.7% |
| | | ரூ.3000இற்கு மேல் | 09 | 8.9% |

8.9% ஆனவர்களே வாரம் ஒன்றிற்கு 3000ற்கும் அதிகமான வருமானத்தை பெறும் குடும்பங்களை சேர்ந்தவர்களாக காணப்படுகின்றனர். ஏனைய மாணவர்கள் 1500-3000 வரையிலான வருமானத்தை பெறும் குடும்பங்களை சேர்ந்தவர்களாகவே காணப்படுகின்றனர். இவர்களில் 49.5% ஆனவர்கள் சொத்து மூலமான வருமானத்தை பெறும் குடும்பங்களை சேர்ந்தவர்களாகவும் 38.6மூ ஆனவர்கள் ஏனைய வருமானம் பெறுபவர்களாகவும் காணப்படுகின்றனர். இதில் வாரம் ஒன்றிற்கு 3000ற்கும் குறைவான வருமானம் பெறுபவர்களே அதிக சதவீதத்தினராக இருக்கின்றனர். இவ்வாறான குடும்பங்களை சேர்ந்த மாணவர்கள் கொரோனா வைரஸ் குறித்த அடிப்படை விளக்கத்தை கொண்டிருப்பினும் அதற்குரிய பாதுகாப்பு பொறிமுறைகளை பின்பற்றக் கூடிய நிலையில் காணப்படவில்லை.

*ஆராய்வோம்...*

# யாழ்ப்பாணத்தில் இருந்து டுபாய்க்கு கதலி வாழை

நவீன விவசாய மயமாக்கல் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணத்தில் இருந்து டுபாய்க்கு வாழைப்பழம் ஏற்றுமதி செய்யும் திட்டத்தின் நிகழ்வு (03.05.2023) நடைபெற்றது. யாழ்ப்பாணம் நிலாவரை சந்தியில் அமைக்கப்பட்டுள்ள வாழைக்குலை பதப்படுத்தல் நிலையத்தில் இந்நிகழ்வு நடைபெற்றது.

யாழ் குடாநாட்டில் கோப்பாய், உடுவில், தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் கதலி வாழைக்குலைகள் நிலாவரையில் உள்ள வாழைப்பழம் சுத்திகரிப்பு நிலையத்தில் பதப்படுத்தப்பட்டு அங்கிருந்து நேரடியாக துறைமுகத்துக்கு கொண்டு செல்லப்பட்டு டுபாய் நாட்டுக்கு வாழைப்பழங்கள் ஏற்றுமதி செய்யப்பட உள்ளன.



இதன் மூலம் நாட்டுக்கு அந்நிய செலாவாணி கிடைப்பதோடு உள்ளூர் விவசாயிகளுக்கும் பெரிதும் நன்மை கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் முதல் கட்டமாக 10 ஆயிரம் கிலோ வாழைப்பழங்கள் வாரந்தோறும் ஏற்றுமதி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டமானது அனுராதபுரம் ராஜாங்கனை வாழைப்பழ ஏற்றுமதி திட்டத்திற்கு அடுத்தபடியாக இரண்டாவது பெரிய திட்டமாக உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




### மூல காரணி

ஈழ மணிபல்லவத்தின் வடக்கிலிருந்து ஒரு செய்தி தீயாய் பரவி வந்தது. **'பறங்கியருடனான போரில் தஞ்சையிலிருந்து வந்த பெரும்படைத் தளபதி வருணகுலத்தான் இறந்துவிட்டானாம்.'**

நல்லைமக்களின் நம்பிக்கையை அந்த செய்தி வெகுவாகத் தடுமாற வைத்திருந்தது. அவர்களின் ஆதங்கங்கள் சனக்கூட்டங்களின் பேச்சுக்களில் வெளிப்பட்டன.

"தஞ்சை வீரரது வியூகப்படி எல்லாம் சிறப்பாகதானே நடந்தேறியதாம். பறங்கியரது கடற்படை கூட முழுவதுமாய் தோற்கடிக்க ப்பட்டதாமே. ஒலிவேராவின் தரைப்படை ஒரு அடி கூட முன்னகர முடியாமல் தன் பலத்தை பறைசாற்றிக் கொண்டிருந்த வருணகுலத்தானிற்கு இப்படியொரு ஆபத்து எப்படி சூழ்ந்திருக்கும்?

ஆபத்து அந்த வீரனின் முன்னால் வந்து எதிர் கொள்ள முடியுமா? பின்னாலிருந்து வந்த ஒரு துரோகத்தின் சதிதான் அந்த மாவீரனை கொன்று விட்டதாம். வன்னிப்படையினருடன் சிங்களப் படையினரும் இணைந்து சுதேசிகள் போல் நல்லைப் படையணிக்குள் புகுந்து வருணகுலத்தானை குறி வைத்திருக்கிறார்களாம். எதிர்பாராத தருணத்தில் மிக்கபிள்ளை ஆராச்சியின் பின்னால் ஒளிந்திருந்த ஒரு வீரன் வருணகுலத்தான் புறமுதுகில் ஆழமாய் வேல் பாய்ச்சி விட்டானாம்.

என்ன அநியாயம் நிகழ்த்தி விட்டார்கள் எம் வன்னிப் படையினர். இவ்வையத்தில் இணையில்லாத வீரன் என புகழ் கொண்டவனை இப்படி சூழ்ச்சியாற்றி கொன்றுவிட்டனரே. பறங்கியர் நினைத்ததை எப்படியெல்லாம் சாதிக்கிறார்கள் பார்த்தீர்களா!

தஞ்சை வீரரை நேருக்கு நேர் போரிட்டு அவர்களால் வெல்லமுடியுமா என்ன? ஒருபோதும் முடிந்திராது அவர்களால். அதுதான் இப்படி அற்ப தந்திரங்களை உபயோகித்து அந்த மாவீரனை கொன்றுவிட்டனர்.

ஆனால் நினைவிருக்கிறதா? அன்றும் அப்படித்தானே, தஞ்சைவீரர் தஞ்சையிலிருந்து வந்த நாள் களிற்றின் மீதேறி அவர் ஊர்வலம் வரும் போது அந்த ஊமையன் அவர் மீது ஈட்டி வீசினானே..

ஆம்.. ஆம்.. நன்றாக நினைவிருக்கிறது. அந்த ஈட்டியை தாங்கிப்பிடித்து தஞ்சை வீரரை காத்தது சேனாதிபதி மகிழாந்தகன் அல்லவா? இப்போது தஞ்சை வீரருக்கு இப்படியொரு ஆபத்து நேர்கையில் நம் சேனாதிபதி எங்கிருந்தார்?

சேனாதிபதியை தான் கோட்டைக்காவற் பணிக்காய் தஞ்சைவீரர் நியமித்துவிட்டுச் சென்றாராமே. அதனால்தான் நம் சேனாதிபதியும் களம் புகவில்லை. களத்தில் சேனாதிபதி இருந்திருந்தால் இப்படியொரு ஆபத்து தஞ்சைவீரருக்கு வந்திருக்குமா என்ன?

அதுவும் சரிதான். ஆனாலும் தஞ்சைவீரர் எப்படி அலட்சியமாக இருந்தார் என்பதுதான் புரியவில்லை? இது போல் பல ஆயிரம் சூழ்ச்சிகளையும் தந்திரங்களையும் கண்டவரல்லவா தஞ்சைவீரர்? பறங்கியனின் எல்லா சூழ்ச்சிகளையும் தகர்த்தெறிந்து வென்ற தஞ்சைவீரரின் பராக்கிரமத்திற்கு என்னவாயிற்று? இப்படி நேருவானேன்..

அவரின் மாவீரம் அப்படித் தடுமாறிப்போக காரணமானதும் நம் நாட்டின் ஒரு பெண் தான் என்கின்றனர்.

ஒரு பெண்ணா? யாரது?

பெரு வணிகர் எச்சதத்தர் மகள் சித்திராங்கதா.

அவளா?? அந்த நாட்டியக்காரியா?

ஆம் அவளேதான்.. அவள் தான் இரகசியமாய் தஞ்சைவீரரை வன்னியருடன் கூட்டுச் சேரும்படி அழைத்துச் சென்றாளாம். அந்த மாவீரரும் மங்கையின் அழகில் சாய்ந்துவிடுகிற வாலிபர் தானே. அதுதான் விழுந்துவிட்டார் போலும். போரிற்குச் செல்ல முதலே நல்லை வேந்தர் பக்கமா? அல்லது வன்னியர் பக்கமா? என்றொரு பெருங்குழப்பத்தில் தான் போரைத் தொடங்கியிருக்கிறார் தஞ்சை வீரர். வன்னியரை எக்காலத்திலும் எதிரியாய் அவர் எண்ணம் கொள்ளவில்லை போலும். அதனையே வன்னியர் தமக்கு சாதமாக்கியுள்ளர் போலும். இந்த தடுமாற்றம்தான் தஞ்சைவீரரது

மாவீரத்தையே நிலைகுலைய வைத்திருக்கிறது. அந்தக் குற்றத்திற்காக தான் மகாராஜா சித்திராங்கதாவை இரகசிமாய் சிறையும் வைத்துள்ளாராம்.”

வருணகுலத்தான் இறந்துவிட்டான் என்ற செய்தியோடு ஊர் வாய்களின் பேச்சுக்களும் வதந்திகளும் இப்படி எல்லையற்று வளர்ந்து கொண்டிருந்தது.

நல்லைக் கோட்டைக்குள்ளும் இந்த செய்தியும் வதந்திகளும் கட்டுப்பாடின்றி பரவியது. உண்மையை சொன்னால் நல்லைக் கோட்டைக்குள் இது ஒரு செய்தி அல்ல. இடி.

சங்கிலிய மகாராஜா ஆட்சிபீடமேறிய நாளிலிருந்து இது போலொரு மோசமான விடியலை அவர் சந்தித்திருக்க வில்லை. தஞ்சை வீரருக்கு ஏதேனும் சிறு ஆபத்து என்றிருந்தாலும் உடன் களம் புகுவேன் என்று அன்று தஞ்சை வீரரிடம் உரைத்த வார்த்தைகள் சங்கிலிய மகாராஜாவின் உள்ளத்தை தீயாய் கருக்கிக் கொண்டிருந்தது.

களத்திலிருந்து ஒற்றர்கள் மூலமும் தெளிவாக எந்தத் தகவலும் வரவில்லை. ஊரிற்குள் பற்றிய வதந்திகள் கேட்டு பதறி களம் விரைய நினைத்த சங்கிலிய மகாராஜாவை மன்றாடித் தடுத்தனர் இராஜமந்திரியாரும் சேனாதிபதியும். தான் சென்று நிலவரம் உடன் அறிந்து வருவதாய் புறப்பட்டான் சேனாதிபதி மகிழாந்தகன். அவனும் இதுவரை எந்த செய்தியும் கொண்டுவரவில்லை.

“எதிரிகள் எத்தனை புதிய ஆயுதங்கள் கொண்டும், வீழ்த்தும் வியூகங்கள் பல வகுத்தும் தாக்குதல்கள் நடத்தியிருந்தாலும் தஞ்சைவீரர் எல்லாவற்றையும் முறியடித்து வெற்றி கண்டிருப்பார். ஆனால் ஊர்மக்கள் சொல்வது போல் நம் நாட்டு சுதேச துரோகிகளால் இப்படி கண்ணிமைக்கும் கணத்தில் வருணகுலத்தான் உயிரிற்கு ஆபத்து சூழ்ந்தது என்கிற செய்தியை என்னால் நம்ப முடியவில்லை இராஜமந்திரியாரே...” அந்த மிக்கபிள்ளையை நம்பி தஞ்சைவீரருடன் போரிற்கு அனுப்பி நான் தான் பெருங்குற்றம் புரிந்து விட்டேனா? தாயே வீரமாகாளி! என் காதுகளில் விழுந்த அந்த செய்தி பொய்யாக இருக்க வேண்டும் தேவி...!”

என்று கைகூப்பி வேண்டினார் சங்கிலிய மகாராஜா.

“அரசே, தஞ்சை வீரர் நாம் எல்லோரும் நினைப்பது போல் சாமான்ய வீரர் அல்ல. களத்தில் என்ன நடந்தது என்று என்னாலும் ஒன்றும் ஊகிக்கமுடியவில்லை. ஊமைக்காத்தவராயனால் கூட நிகழ்ந்ததை முழுதாய் அறிய முடியவில்லை. களத்தில் வருணகுலத்தானை காணவில்லை என்றே செய்தி வந்தது. தஞ்சைபடை வீரர்கள் மிகுந்த ஆவேசத்தோடு இருப்பதாயும் காத்தவராயன் கண்டுவந்த செய்தி சொன்னான்.

களத்திற்கு விரைந்த மகிழாந்தகன் படை தான் இனி நல்ல செய்தியோடு வரவேண்டும் என்று நானும் காத்திருக்கிறேன் வேந்தே,

ஆனால் எம் நம்பிக்கை இன்னும் சாகவில்லை வேந்தே. இந்த வெள்ளெலிகளோ, கொடுந் துரோகிகளாலோ நம் தஞ்சைவீரரை ஒருபோதும் சாய்த்திருக்க முடியாது. பொறுமை காத்து அமைதி கொள்ளுங்கள் வேந்தே"

"எப்படி பொறுமை காப்பேன் இராஜமந்திரியாரே, இதற்கு மேல் எதற்கு பொறுமை, நம் நாட்டவர்களே இப்படி மூடச்செயல் செய்ய துணிந்தனர் என்றால் இனி நிகழ என்ன இருக்கிறது? சொல்லுங்கள் இராஜமந்திரி? இனியும் என்ன பொறுமை வேண்டியிருக்கிறது எனக்கு?"

"இனி நிகழப்போது என்ன என்பதை என்னாலும் நினைத்துப்பார்க்க முடியவில்லை வேந்தே. ஆனால் இனி நாம் செய்ய வேண்டிய முக்கிய காரியம் ஒன்றுள்ளது வேந்தே. யாரிற்கும் நிகரில்லா வீரரென தஞ்சையிலிந்து நம்குடி காக்க புறப்பட்டு வந்த வீரரிற்கு இந்த ஈழநாட்டு துரோகிகள் கொடுத்த பரிசை நினைக்கையில் நான் கூனிக்குருகுகிறேன் வேந்தே!

யாருக்காக படைதிரட்டி புறப்பட்டு வந்தாரோ அவர்களே தஞ்சைவீரர் உயிரை பறிக்க துணிந்தனர் என்று தஞ்சை இரகுநாதநாயக்கர் அறிந்தால் நம் இராச்சியம் குறித்து நாம் கர்வம் கொள்ள என்ன இருக்கிறது வேந்தே!!!


மலைபோல் நம்பியிருந்த வீரனை இப்படி மாயத்திட்டங்களால் மண்ணில் சாய்க்க எண்ணி விட்டனரே கொடுந்துரோகிகள்.

வன்னியன் சூழ்ச்சிகளை இதுவரை பொறுத்தது நம் குற்றம்தான் வேந்தே. அவனிற்கு முறையாட பாடம் அன்று வன்னியர் விழாவிலேயே கொடுத்திருக்க வேண்டும். அவனை இனியும் விட்டு வைக்க கூடாது. அத்தோடு எல்லாவற்றையும் தொடக்கி வைத்தவள் அந்தப் பேதைப்பெண் சித்திராங்கதா அல்லவா? அவளில்லை என்றால் வன்னியத்தேவனால் வருண குலத்தானை நெருங்கியிருக்க முடியுமா? அவளது அடங்காத்தனம் - அதை கண்டிக்காமல் விட்ட எம் அலட்சியம் இன்று என்ன விளைவிற்கு அழைத்து வந்துவிட்டது பார்த்தீர்களா வேந்தே!!

நம் எதிரிகளை விட இந்த தேசத்து களைகளையே முதலில் தயவு தாட்சண்யம் பார்க்காமல் நாம் கிள்ளி எறிய வேண்டும். இல்லாவிட்டால் எம் படைத்திறன் எத்தனை பலமாய் இருந்தாலும் எம்மால் பறங்கியனை சாய்க்க முடியாமலே போகும். அந்த வன்னியத்தேவன் இந்த ஈழத்தை விட்டே கிள்ளி எறியப்பட வேண்டியவன். அதற்கு முதல் நம் சிறையில் அடைபட்டு கிடக்கிறாளே சித்திராங்கதா அவளிற்கு உரிய பாடத்தை புகட்ட வேண்டும். இனி இதுபோல் இங்கு சூழ்ச்சிகளில் ஈடுபட

எவரிற்கும் துணிவு வராதபடி ஒரு பாடம் புகட்ட வேண்டும் வேந்தே!

தஞ்சை வீரரிற்கு என்ன ஆனது என்கிற ஆதங்கம் எல்லோருக்கும் என்ன வேகத்தில் உருவானதோ அதே வேகத்தில் சித்திராங்கதா மேலும் எல்லோர்க்கும் பெருங்கோபம் மூண்டது. வன்னியரோடு பகை வளர்க்க வருணகுலத்தான் விரும்பாததற்கு சித்திரங்கதாவே காரணம் என எல்லோரும் நம்பினார்கள். வன்னியரை பகைவனாய் எண்ணாமல் அலட்சியமாய் இருந்ததாலே தஞ்சை வீரர் உயிர் பறிக்கப்பட்டுள்ளது



என்பதே அனைவரும் கண்டெடுத்த உண்மையாகி இருந்தது.

சங்கிலிய மகாராஜாவின் பேரவை அவசரமாக கூடியது. மந்திரிமார்கள், மாகாண அதிகாரங்கள், கூடவே மஞ்சரி தேவி, மாருதவல்லி எல்லோரும் வருணகுலத்தானிற்கு என்ன ஆனது என்ற பெரும் பரபரப்போடு அவையில் கூடியிருந்தனர். பெருங்கூட்டம் அங்கு கூடியிருந்தாலும் ஒரு விதமான சோகத்தின் அமைதியும் அந்த அவையை இறுக்கமாக பற்றியிருந்தது.

விலங்குகள் பூட்டப்பட்ட பெருங் குற்றவாளியாய் சித்திராங்கதா அந்த அரசவைக்கு வரவழைக்கப்பட்டாள். அங்கிருந்த யாரும் கற்பனையிலும் நினைத்துப் பார்த்திரா காட்சி அது.

சங்கிலிய மகாராஜா ஆக்ரோசமாக ஆசனத்தை விட்டு எழுந்தார்.

“ஒரு பெண்ணிற்கு இப்படி விலங்கிட்டு நம் அரசவைக்கு அழைத்து வருவது நம் இராச்சியத்திலே இதுதான் முதல்முறை. ஆனால் இவள் ஒரு பெண் என்பதையே மறக்க வைக்குமளவிற்கு கொடுஞ் செயலாற்றியுள்ளாள் என்பதை என்னால் மறக்கமுடியாது. இன்று நாம் எல்லோரும் இப்படித் தத்தளித்து நிற்க வித்திட்டவளும் இவள் தான். தஞ்சைவீரரிற்கு என்ன நேர்ந்தது என்பது தெளிவுற தெரியவில்லை. சுதேசிகள் வருணகுலத்தான் உயிரை காவுகொண்டர் என்பது உண்மையில்லாமல் இருக்க வேண்டும் என்பதே எம் அனைவரதும்

பிரார்த்தனை. ஒருவேளை அது உண்மையாக இருந்தால் நம் நாட்டிற்கு கொடும்பழி வந்து சேர காரணமான துரோகி இதோ இவள்தான். பொல்லாப்பறங்கியனுடன் கூட்டுச்சேர்ந்த வன்னியனுடன் வருணகுலத்தானையும் இணைக்க இரகசியமாய் தன் மாயவலையில் அந்த மாவீரனை வீழ்த்தி சூழ்ச்சிகள் பல புரிந்திருக்கிறாள் இந்தப்பாதகி. இவள் இப்பாதகம் ஆற்றாமல் இருந்திருந்தால் வன்னிவேந்தனால் வருணகுலத்தானை நெருங்கி யிருக்கவே முடியாது.

இன்று தஞ்சை வீரரின் உயிரிற்கே வன்னியத்தேவனால் ஆபத்து வந்தது உண்மையென்றால் அதற்கு மூலதுரோகியே இதோ இந்த ஆடலரசி சித்திராங்கதா தான். இவளை போன்றோரை இனியும் மன்னித்து பெருங்குற்றம் புரிய மாட்டேன். இவளையும் வன்னியத்தேவனையும் இனியும் பொறுத்தருள்வது எம் முட்டாள் தனமாகும்."

சங்கிலிய மகாராஜாவின் நிதானம் எங்கோ தொலைந்துவிட்டது. வருணகுலத்தானிற்கு என்ன ஆனது என்பதை அறியும் வரை அவரை எதனாலும் கட்டுப்படுத்த முடியாது என்பதை அவரது பேச்சு உணர்த்தியது.

மஞ்சரிதேவியும் மாருதவல்லியும் பதைபதைப்போடு ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். என்ன நிகழப் போகிறது என்பது புரியாமல் எது நிகழ்ந்தாலும் ஏதும் செய்ய முடியாதவர்களாய் அவர்கள் இருவரின் கண்களும் கண்ணீரால் நிரம்பியது.

ஆனால் சித்திராங்கதாவின் செவிகளில் அரசரின் அந்த வார்த்தைகள் விழுந்தனவோ தெரியவில்லை. அவள் செவிகள் அடைத்து விட்டது போல் நின்றுகொண்டிருந்தாள். அவள் கண் பார்வையும் பூமியை விட்டு நிமிரவில்லை.

"எதுவும் பேசாமல் நின்றால் நீ செய்தது தவறல்ல என்றாகுமா பேதைப் பெண்ணே? நீ செய்தது இதுவரை மன்னிக்கப்பட்டது போல் இனிமேலும் முடியாது. பதில் சொல் பெண்ணே! குற்றத்தை ஒப்புக்கொள்கிறாயா சொல் பெண்ணே? நீ செய்த குற்றத்தின் விளைவை இப்போதாவது உணர்ந்தாயா மூடப் பெண்ணே.. மாவீரனிற்கு இப்படியொரு நிலை வரவா ஆசைப்பட்டாய்? இதற்கா நல்லை அரசையே எதிர்த்து சதி செய்தாய்? பதில் சொல்!"

என்று இராஜமந்திரியாரின் குரலும் ஆவேசமாய் ஒலித்தது.

அவள் அப்போதும் எதுவும் பேசவில்லை. பேசுவதற்கு அவளிற்கு ஒன்றுமில்லை என்பதுபோல் அசையாமல் பூமியை பார்த்தபடியே நின்று கொண்டிருந்தாள்.

அமைச்சர் ஒருவர் தொடர்ந்தார். "சபையை அவமதிக்காதே பெண்ணே, இன்று தஞ்சை வீரன் இறந்துவிட்டான் என்ற செய்தி....."

“ஐயோ............”

அதற்கு மேல் யாரையும் பேச அனுமதிக்காமல் கத்தியபடி தரையில் வீழ்ந்தாள் சித்திராங்கதா.

தரையில் வீழ்ந்தபடி தலை நிமிராமலே அவள் பேசத்தொடங்கினாள்.

“பெரியோர்களே, அவையோர்களே! நீங்கள் எல்லோரும் சொல்வது சரி. நான் தான் குற்றவாளி! நான் தான் நீங்கள் சொல்வது போல் துரோகி! இனியும் எதற்கு இந்த துரோகியை உயிரோடு வைத்துள்ளீர்கள்? என்னை கொன்றுவிடுங்கள்.. இந்த சபையிலேயே என்னை கொன்றுவிடுங்கள்....”

“அப்படியென்றால் தஞ்சைவீரரை வன்னியர்பக்கம் சாட முயன்றது நீதான் என்பதை ஏற்கிறாயா? இன்று ஒருவேளை தஞ்சைவீரன் இறந்தது உண்மையென்றால்..........”

“ஐயா போதும் நிறுத்துங்கள்....”

குனிந்திருந்த அவள் தலை கூறிய அமைச்சரின் கண்களை நோக்கி இமைக்கும் நொடியில் திரும்பியது. அந்த பார்வையில் அதற்கு மேல் பேசமுடியாமல் ஊமையானார் அமைச்சர்.

“ஐயா பெரியோர்களே. உங்கள் அனைவரையும் மன்றாடிக் கேட்கிறேன். இந்த செய்தியை இனி என் செவிகளில் சொல்லாதீர்கள். அப்படிச் சொல்வதாயின் அதற்கு முதல் என் உயிரை எடுத்துவிடுங்கள். என்... என்... தஞ்சைவீரரிற்கு எந்த ஆபத்தும் சூழ்ந்திருக்காது. நான் நம்ப மாட்டேன். அவர் இல்லாத உலகில் என் சுவாசம் எஞ்சியிராது. உண்மை எனக்குத் தெரியும். உங்கள் உண்மைகளை நீங்கள் கண்டறிய முன் உங்களை மன்றாடிக் கேட்கிறேன். தாமதிக்காதீர்கள்! என்னை கொன்றுவிடுங்கள்! அரசே... மன்றாடிக் கேட்கிறேன் என்னைக் கொன்றுவிடுங்கள்!

“வேண்டாம் அரசே வேண்டாம்.. ஆத்திரத்தில் முடிவெடுக்காதீர்கள்! மகிழாந்தகன் வரும் வரை சிறிது பொறுமை கொள்ளுங்கள் பிரபு!”

அரசர் முன் கைகள் கூப்பி வேண்டினார் மஞ்சரி தேவி. மாருதவல்லியும் கூடவே கண்கள் கலங்க கைகள் கூப்பி நின்றாள்.

மாருவல்லியின் அந்த மன்றாட்டத்தை பார்த்த மகாராஜாவால் என்ன செய்வதென்றே புரியவில்லை. நிதானத்தை வேண்டி பெரு மூச்செறிந்தார்.

குழப்பத்தில் மன்னர் மௌனம் காத்த வேளை தஞ்சை படை வீரர்கள் இருவருடன் அவசரமாய் மகிழாந்தகன் அவையை நோக்கி வந்து சேர்ந்தான்.

***திரை விலகும்...***

# யார் இந்த மதீஸ பத்ரன...?



எஸ்.எஸ்.நுஜன்

இசைக் குடும்பத்திலிருந்து கிரிக்கெட்க்குள் நுழைந்திருக்கும் புதிய வரவு தான் மதீஸ பத்ரன. இலங்கையின் ஹாரிஸ்பத்துவ இல் வளர்ந்த பத்ரன தனது தந்தையினை போல் பியானோ வாசிக்க கூடியவர், ஆனால் இவரின் தாயாரும் இரு சகோதரிகளும் கிட்டார் கலைஞர்கள் .

”ஸ்விங் சுல்தான்” வாசிம் அக்ரம் போல், ”வேகப் புயல்” பிரட் லீ போல் பந்து வீச வேண்டும் என்ற காலங்கள் இருந்தது. மாலிங்க வின் சிலிங் பாணியில் பந்து வீச இப்போது அதிகமானோர் முயற்சிக்கின்றனர். ஆனால் அது எல்லோருக்கும் கை கொடுக்கவில்லை. மதீஸ பத்ரன அதில் வெற்றி கண்டுள்ளார் என்று தான் சொல்லவேண்டும். மாலிங்க பந்தை விடுகின்ற.்.எறிகின்ற புள்ளிக்கு கீழாகவும்.். அதிக வேகத்திலும் பத்ரன பத்தினை விடுகிறார்/எறிகிறார் என்பது கவனிக்கத்தக்கது.

கண்டியில் அமைந்துள்ள Trinity College இலிருந்து லகிரு குமார விலக அவர்களுக்கு ஒரு வேகப்பந்து



வீச்சாளர் தேவைப்பட்டது. அதே நேரத்தில் இலங்கை முன்னாள் வீரர் சமிந்த வாஸ், கொழும்புக்கு அழைத்து இருந்தார். பெற்றோர்களுக்கு தமது பிள்ளை பிரிவது கடினமானதாக இருந்தால் சொந்த இடமான Trinity அவர்களுக்கு உகந்த முடிவாக இருந்தது. Trinity க்கான முதல் போட்டியிலே ஐந்து இலக்குகளை 11 ஓட்டங்களை மாத்திரமே கொடுத்து வீழ்த்தினான் மதீஸ.

விரைவாக முன்னேறிய பத்ரனக்கு, இலங்கையின் 19வயது அணிக்காக 2020 மற்றும் 2022 உலக கிண்ண அணியில் விளையாடும் வாய்ப்பு கிடைத்தது. அத்துடன் அதில் வீசிய மணிக்கு 175 கிலோமீட்டர் என்ற வேகத்தில் வீசிய பந்து குறும் காணொளியாக தீயாய் பரவியது. அதே போல் 2021 இல் பத்ரன பந்துவீச இலக்குகளை சாய்க்கும் காணொளியும் பரவி இது இந்திய முன்னாள் அணித் தலைவரும் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் தலைவருமான மகேந்திர சிங் தோனியின் கையடக்க தொலைபேசி வரை சென்றது. இதனால் சென்னையின் வலைபந்து வீச்சாளர் ஆகும் வாய்ப்பு பத்ரனவுக்கு கிடைத்தது. இதற்கு, ஆரம்பத்தில் வுசைவைல சம்மதிக்காவிடினும் இறுதியில் சம்மதித்தமை குறிப்பிடத்தக்கது.

பின்னர் சென்னை அணியால் ஏலத்தில் எடுக்கப்பட்டு தற்போது இந்தியன் பிரீமியர் லீக்கில் கலக்கும் மதீஸ பத்ரன, அனைவர் கவனத்தையும் ஈர்த்துள்ளார்.

பத்ரனவுக்கு இரு சவால்கள் பிரதானமாக காத்திருக்கிறது. இரண்டுமே அவரது பந்து வீச்சு பாணி சார்ந்தது தான். முதலாவது அவர் பந்தை வீசும் போது அவரது கை தோளுக்கு கிட்டத்தட்ட சரி நேராக உள்ளது. இது கிரிக்கெட் ரசிகர்கள்






இடையே பேசு பொருளாகியுள்ளது. ஏனெனில், தோளுக்கு சற்று கீழே சென்றால் முறையற்ற பந்தாக மாறும். இது தொடர்பாக ரவிச்சந்திரன் அஸ்வின் தனது வலையொளியில் கருத்து தெரிவித்துள்ளார்.

இரண்டாவது இந்த பாணியில் வீசுவதால் ஏற்படும் உபாதைகள் தொடர்பானது. மகேந்திர சிங் தோனியும் இதை கருத்தில் கொண்டு டெஸ்ட் போட்டியில் விளையாடாமல் ரி20 மற்றும் உலக கிண்ண தொடர்களில் மட்டும் விளையாடலாம் என்று கூறியுள்ளார். இதற்கு நேர்எதிர்மாறாக லசித் மாலிங்க, தான் இவ்வாறான பந்து வீச்சு பாணியுடன் 16 வருடங்கள் கிரிக்கெட் ஆடியுள்ளேன் ஆறு




வருடங்கள் டெஸ்ட் போட்டியில் விளையாடியுள்ளேன் என்று பத்ரனவையும் டெஸ்ட் போட்டியில் விளையாடலாம் என்று சர்ச்சையை கிளப்பியுள்ளார்.

தற்போது இந்தியாவின் பும்ராக்கு ஏற்பட்டு இருக்கும் உபாதைகள் கருத்தில் கொள்ளப்பட வேண்டியவை.

இவற்றை எல்லாம் எவ்வாறு கடந்து பத்ரன சாதிக்க போகிறார் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம். மதீஸ பத்ரன சிறப்பாக செயல்பட தூமியின் வாழ்த்துகள்.